[illegible]

V 6 No 46. 23 NOV 1933

JL
2211, N128 K14
N133.6.46.
189170

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

27 MAY 1934
MADRAS

Vol 6.] 1933 ஆம் நவம்பர் மீ 23௳ [No. 46

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 821
2. அப்பர் (64 கலை-வியாகரணம்-சந்த விருத்தம்)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 823
3. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 2-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 825
4. ஞான தீபம்
T. R. இராஜகோபால் 827
5. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம் 828
6. கம்பராமாயணம் (அயோமுகிப் படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 831
7. யாப்பிலக்கணம்—(வண்ணம்)
வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 833
8. கலித்தொகை (பாலைக்கலி, 35)
T. A. கனகசபாபதி முதலியார் 834
9. வர்த்தமானம் 835

கலாநிலயம்

189170

ஏழைச் செல்வம்.

மனிதர் தினசரி வாழ்க்கையின் திட்டம் உயர்ந்தாலன்றி இந்தியாவின் பொருளாதார நிலை உருப்படாதென்று பேசுவார் எத்தனையோ பலர். இதற்குச் சார்பாக இங்கிலாந்து முதலிய நாடுகளில் உள்ளவர்களுடைய வருவாயுடன் இந்தியர்தம் வருவாயை அளந்து காட்டி, இதனை உயர்த்தி அதன் நிலையை அடைய வேண்டுமென்று ஆரவாரம் செய்கின்றனர். இப்படி இங்கிருப்பவர்கள் அங்காந்து நிற்கும்படி காட்டப்படும் அவ் விங்கிலாந்து முதலிய நாடுகளின் வாழ்க்கையின் தன்மையும் தருமம் எவ்வாறு இருக்கின்றன வென்பதை நினைவுசெய்து தருகின்ற சில பெரியோர் தம் சொற்களைக் கேட்டுக்கொண்டிருத்தல் நலம். எட்வர்ட் கார்ப்பெண்டர் என்பவர் இங்கிலாந்தின் 'செல்வம்' எத்துணை ஏழ்மை உடையது என்பதைப் பின்வருமாறு காட்டுகின்றார்:—

While it seems to be admitted now on all hands that the social condition of this country is about as bad as it can be, and while many schemes, more or less philanthropic or revolutionary, are proposed for its regeneration, it just occurs to me to bring forward, by way of balance, the importance of personal actions and ideals. For as the nation is composed of individuals, so the forces which move the individual—the motives, the ideals, which he has in his mind—are, it seems to me, the main factors in any nation's progress, and the things which ultimately decide the direction of its movement.

At the bottom, and behind all the elaborations of economic science, theories of social progress, the changing forms of production, and class warfare, lies to-day the fact that the old ideals of society have become corrupt, and that this corruption has resulted in dishonesty of life. It is this dishonesty of personal life which is becoming the occasion of a new class war, from whose fierce parturition-struggle will arise a new ideal-destined to sway human society for many a thousand years, and to give shape to the forms of its industrial, scientific, and artistic life.

The feeling, indeed, seems to be spreading that England stands already on the verge of a dangerous precipice; at any moment the door may open for her on a crisis more serious than any in her whole history. Rotten at heart, and penetrated with falsehood, her aristocracy emasculated of its manhood, her capitalist classes wrapped in selfishness, luxury, and self-satisfied philanthropy, her Government offices—army, navy, and the rest—effete, plethoric, gorged (in snake-like coma) with red tape, her Church sleeping profoundly-snoring aloud—her trading classes steeped in deception and money-greed, her laborers stupefied with overwork and beer, her poorest stupefied with despair, there is not a point which will bear examination, hardly a wheel in the whole machine which will not give way under pressure. The first serious disturbance now, and the wheels will actually cease to go round; the first great strain—European or Eastern war—and it seems not improbable that the governing classes of

England will succumb disgracefully. Then—with an exhausting war upon us, our foreign supplies largely cut off, our own country (which might grow ample food for its present population) systematically laid waste and depopulated by landlord legislation, with hopeless commercial depression, stagnation of trade, poverty, and growing furious anarchy—our position will be easier imagined than described.

In the face of such considerations it were well to go straight to the heart of the matter. It were well to consider whether possibly the fate of a great nation may not very profoundly centre round this question of the honesty of its life. The difficulty is that to many people—and to whole classes—mere honesty seems such a small matter. If it were only some great Benevolent Institution to recommend! But this like Naaman's case in the Bible: to merely bathe in the Jordan and make yourself clean is really too undignified!

Yet the moment one comes to look into the heart of modern society one perceives how essentially unclean it is—how, after all, the pervading aim and effort of personal life, either consciously or unconsciously entertained, is to maintain ourselves at the cost of others—to live at the expense of other folk's labor, without giving an equivalent of our own labor in return—and if this is not dishonesty I don't know what is!

Let a man pause just for once in the horrid scramble, and ask himself what he really consumes day by day of other people's work—what in the way of food, of clothing, of washing, scrubbing, and the attentions of domestics, or even of his own wife and children—what money he spends in drink, dress, books, pictures, at the theatre, in travel. Let him sternly, and as well as he may, reckon up the sum total by which he has thus made himself indebted to his fellows, and then let him consider what he creates for their benefit in return. Let him strike the balance. Is he a benefactor of society?—is it quits between him and his countrymen and a minus quantity?—a beggar alms-receiver, or thief?

And not only What is he? but What is he trying to be? For on the Ideal hangs the whole question. Here at last we come to the root of national life. What the ideal cherished by the people at large is, that the nation will soon become. Each individual man is not always sure to realise the state of life that he has in his mind, but in the nation it is soon realised; and if the current idea of individual is to *get* as much and *give* as little as they can, to be debtors of society and alms-receivers of the labor of others, then you have the spectacle of a nation, as England to-day, rushing on to bankruptcy and ruin, saddled with a huge national debt, and converted into one gigantic workhouse and idle shareholders' asylum. (Imagine a lot of people of an island—all endeavouring to eat other people's dinner, but taking precious care not to provide any of their own—and you will have a picture of what the "well-to-do" on this island succeed in doing and a lot of people not well-to-do are trying to arrive at.)

For there is no question that this is the Ideal of England to-day—to live dependent on others, consuming much and creating next to nothing—to occupy a spacious house, have servants ministering to you, dividends converging from various parts of the world towards you, workmen handing you the best part of their labor as profits, tenants obsequiously bowing as they disgorge their rent, and a good balance at the bank; to be a kind of human sink into which much flows but out of which nothing ever comes—except an occasional putrid whiff of Charity and Patronage—this, is it not the thing which we have before us? which if we have not been fortunate enough to attain to, we are doing our best to reach?

Sad that the words "lady" and "gentleman"—once nought but honorable—should now have become so soiled by all ignoble use. But I fear that nothing can save them. The modern Ideal of Gentility is hopelessly corrupt, and it must be our avowed object to destroy it.

Of course, among its falsities, the point which I am alluding to is the most important. It is absolutely useless for the well-to-do of this country to talk of Charity while they are abstracting the vast sums they do from the laboring classes, or to pretend to alleviate by philanthropic nostrums the frightful poverty which they are *creating wholesale by their mode of life*. All the money given by the Church, by charity organisations, by societies or individuals, and all the value of the gratuitous work done by country gentlemen, philanthropists, and others, is a mere drop in the ocean compared with the sums which these same people and their relatives abstract from the poor, under the various legal pretences of interest, dividends, rents, profits, and state-payments of many kinds. "They clean the outside of the cup and platter, but within they are full of *extortion* and *excess*."

If for ever man who consumes more than he creates there must of necessity be another man who has to consume less than he creates, that must be the state of affairs in that nation where a vast class—and ever vaster becoming—is living in the height of improductive wastefulness? Obviously another vast class—and ever vaster becoming—must be sinking down into the abyss of toil, penury, and degradation. Look at Brighton and Scarborough and Hastings and the huge West End of London, and the polite villa residences which like unwholesome toadstools dot and disfigure the whole of this great land. On *what* are these "noble" mansions of orgainsed idleness built except upon the bent back of poverty and lifelong hopless unremitting toil! Think! you who live in them, what your life is, and upon what it is founded.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[808-வது பக்கத் தொடர்ச்சி]

VII. (Irregular and obsolete metrics) விதிக்குப் புறம்பாய சில பழைய சந்தவிருத்தங்களும் அவற்றின் தன்மையும்:—

முன்னே கூறிய அவ் விதிகளுக்கு அடங்காச் சந்த விருத்தங்களும் சில உள. இவ்வகையில் காணக்கூடி பன, (i) இரட்டித்த அடிகளைப்பெற்ற சந்தவிருத்தங்கள்; (ii) இரண்டொரு சீர் குன்றிவரும் சந்த விருத்தங்கள், (iii) இரண்டொரு சீர் அதிகமாய்ப்பெற்று வருகின்ற சந்த விருத்தங்கள், (iv) வரவேண்டிய சீருக்குப்பதிலாய் வேறு சீர் வருகின்ற சந்த விருத்தங்கள், (v) சம்பந்தர் முதலிய சமய குரவர்களின் நூதன சிருஷ்டிகள். இவற்றில் சில முறையே விவரிக்கு முன்னர் விருத்த யாப்பின் ஒழிபு சிலவற்றைக் கவனிப்பது அவசியம்:—

(i) சந்தவிருத்த ஒழிபின் தன்மை.

சந்த விருத்தங்களின் சீர்கள் யாவும் இசைத்தமிழ் இலக்கணத்தை அடிப்படையாய்ப் பற்றியிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு சந்தச்சீரின் எழுத்துக்களின் மாத்திரைத் தொகுதி அவ்வெழுத்துக்களை எண்ணிக்கூட்டுதலில் சிலசமயங்களில் குற்றம்நேரும். அவற்றைப் பாதுகாக்கும்வண்ணம் விருத்தப்பாவிபல் ஆசிரியர் ஐந்து விதிகளைக் கவனிக்குமாறு ஒழிபியல் கூறினர். அவற்றில் சில முன்னரே கண்டிருப்பினும், மாணவர் எளிதிலுணருமாறு மற்றுமொருதரம் கூறல் குற்றமாகாது: அவையாவன:—

(1) விளச்சீர் வரும் என்று விதித்த இடத்திலே மாங்காய்ச் சீரையும் வேண்டிப் பாடுவதுண்டு. சாதாரண அறுசீர் விருத்தத்தில் முதல்வகுப்பாய்க் கொண்ட, (விளச்சீர் மாச்சீர், தேமாச்சீர் இரட்டி வரும்) விருத்தங்களில் அப்பர் பாடியுள்ள திருநேரிசைப் பண் திருப்பதிகச் செய்யுள்களில் ஒன்றை நோக்குவோம்:—

மலையினார் மகளோர் பாக
　　மைந்தனார் மழுவொன் றேந்திச்
சிலையினால் மதில்கள் மூன்றுந்
　　தீயெழச் செற்ற செல்வர்
இலையினார் சூல மேந்தி
　　யேகம்ப மேவி னாரைத்
தலையினால் வணங்க வல்லார்
　　தலைவர்க்குத் தலைவர் தாமே.
　　　　திருவேகம்பம் -திருநேரிசை 3.

இதில் "யேகம்ப" "தலைவர்க்குத்" என்னும் காய்ச்சீர்கள் விளச்சீர் வரவேண்டிய இடத்தில் வந்திருத்தல் காண்க:—

இன்னவாறே காய்ச்சீர் வரவேண்டிய இடத்தில் நீண்ட விளச்சீர் வரும். அதாவது நெடிலீற்று விளச்சீர் வரும். அதைக் காய்க்குப் பதிலாக விளாம் வருமென்பர். விருத்தத்தில் 'விளாம்' என்னும் நீண்ட விளச்சீர் நேரசையைப் பெற்று விளங்காய்ச்சீராய் வாராது. அவ்வாறு வெண்பாவில் வரக்கூடுமாயினும், விருத்தத்தில் ஒரு கவி அதை வைத்துப்பாடுவானாயின், அவன் யாப்புஉணராதவனென்றும், அவனை ஞானம் சற்றுமில்லாதவனென்றும் அஞ்சாது தமிழ்மாணவர் கூறலாம். விளாங்காய்ச்சீர் தமிழ் விருத்த இலக்கியத்தில் எங்கும் கிடையாதென்பது செவ்வனே உணர்க. இதனால் 'முதனான்கும் காயாகிப் பின்னவை மா, தேமா வாய்" வரும் அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தத்தில், அப்பர் பாடிய திருவாரூர் பழமொழி—பண்—காந்தாரப் பதிகத்திலும், திருக்கழிப்பாலை - பண் - காந்தரப் பதிகத்திலும், காய்க்குப் பதிலாய் நீண்ட விளச்சீர் வருவது காண்க:—

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
　　மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
　　யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
　　மயிலாலு மாரூ ராரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
　　காய்கவர்ந்த கள்வ னேனே.
　　—திருவாரூர் - பழமொழி - பண் - காந்தாரம்—1.

இவ்வாறு கம்பனும், நெடிலீற்று விளச்சீர்களைக் காய்க்குப் பதிலாய்ப் பயன்படுத்துதல் காண்க:—

எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொல்
　　மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனலுழைந்தா
　　லெனச்செவியிற் புகுத லோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
　　வாருயிர்நின் றூச லாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
　　கடுந்துயரங் கால வேலான்.

இதில் "எண்ணிலா" "புண்ணிலாம்" "உண்ணிலா" "கண்ணிலான்" என நெடிலீற்று விளச்சீர்கள் காய்ச்சீரிடத்தில் வந்தமை காண்க.

(ii) கூவிளச்சீர்கள் வருமென்று குறித்துள்ள பல இடங்களில் காய்க்குப்பின் நேரும், மாச்சீரை யடுத்த நிரையசையும் பொருந்தும். (உ-ம்)

வாழி சானகி வாழியி ராகவன்
வாழி நான்மறை வாழிய ரந்தணர்
வாழி நல்லற மென்றுற வாழ்த்தினான்
ஊழி தோறும் புதிதுறு சீர்த்தியான்

இங்கு "தோறும்" என்னும் மாச்சீருக்குப் பின்பு "புதி" என்னும் நிரையசை வந்ததால், இது இசையில் கூவிளத்துக்குச் சமமாயிற்றென்க. அப்பர் விடந்தீர்த்த திருப்பதிகத்திலும் இதைக் காணலாம்.

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே

(iii) நிரையசை யேனும், நேரசையேனும் நிற்றலாகுமென்று விதிக்கக்கூடிய இடங்களில் இரண்டு குறிலாலாக்கப்பட்ட நிரையசை நிற்குமாகில், அவ்வசையின் முதல்குறிலை அதற்கு முன்னுள்ள சீரோடு,

விருத்தவிதி பொருந்தும் நிமித்தம் கூட்டி அலகிடுதல் குற்றமாம். மேற்கூறிய அப்பர் தேவார உதாரணத்தில் "சிந்தையு—யர்வரை" என்று பிரித்து அலகிடுதல் குற்றமாகும். ஆயினும்,

மொழியொடு சீர்வழி முரணு மாகலின்
மொழியது கடைநிகழ் குறிலே முன்னிலா
மொழியொடு முடித்துமெய் யுடைக்குற் றீருயிர்
பிழையறு கூறிரண் டாலும் பேணுவார்
விருத்தப்பாவியல்.

என்னும் விதியால், மொழிக்குக் கடையி லிருக்கின்ற குற்றெழுத்தைப் பின்மொழியோடு சேர்த்து முடித்து இரண்டு குறிலையும் அதன்பின் ஒரு மெய்யையும் உடைய பதத்தையேனும் பதத்தின் முதலசையேனும் இரண்டு பாகமாகவும் விரும்புவார் கவிவாணர்கள்:- (உ - ம்)

என்றென் றுயிர்விம் மியிருந் தழிவாள்
மின்றுன் னுமருங் குல்விளங் கிழையாள்
ஒன்றென் னுயிருண் டெனினுண் டிடர்யான்
பொன்றும் பொழுதே புகழ்பூ ணுமெனு

என்னும் விருத்தத்தில் 'விம்மி' யென்பதின் ஈற்று மிகரம் 'யிருந்து' என்னும் வருமொழியோடு சேர்ந்தது காண்க.

மேற்கண்ட விருத்தம் திருநாவுக்கரசு நாயனர் திருக்குறுந்தொகைப் பண்ணைச் சார்ந்தது. (உ - ம்)

ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே
—திருக்கடம்பந்துறை - திருக்குறுந்தொகை 3.

(iv) ஒற்றெழுத்துக் குறிலோடு பின்னேசேர்கின்றபோது, அக்குறிலும் ஒற்றும் சேர்ந்து இரண்டு மாத்திரை அளவாகுமென்று முன்னர்க் கூறப்பட்டதன்றோ? ஆயினும் சந்தத்தில் நல்ல வொலி தராத * ஒற்றெழுத்து கணக்கினின்று நீக்கப்படும். அவ்வெழுத்தே விதிக்குவேண்டிய இடத்தில் நிலையாகக் கணக்கில் சேர்க்கப்பட்டு ஒரு மாத்திரை பெறும். இது உலகவழக்கத்தில் ஏழைகளை நீக்குவதும் வேண்டுழிக் கொள்வதும் போலாம் என்பர் விருத்தப்பாவியல் ஆசிரியர். இதற்கு உதாரணம்:—

நீண்டவிழி நேரிழைதன் மின்னினிற மெல்லாம்
பூண்டதொளிர் பொன்னனைய பொம்மனிற மெய்யே
ஆண்டகைதன் மோதிரம டுத்தபொரு ளெல்லாம்
தீண்டளவில் வேதிகைசெய்தெய்வமணி கொல்லோ.

என்பதில் "நேரிழைதன்" என்னும்சீரின் ஈற்றிலுள்ள னகர மெய்யும்,'பூண்டதொளிர்'என்பதில் ரகரமும், "ஆண்டகைதன்" என்பதில் னகர மெய்யும் "தீண்டளவில்" என்பதின் லகர மெய்யும் நீக்கப்படுவன வென்க.†

ஏழைகளை நீக்குவதும் வேண்டுழிக் கொள்வதும் நீதியல்லாமைபோல், கம்பன் போன்ற பெரியோர்கள் அவ்வாறு செய்யினும், வல்லொலியற்ற எழுத்தைநீக்குவதும் கொள்வதும் சாதாரண கவிகளுக்கு ஒழுங்காகாது.

(v) பெரியோர்கள் பாடிய விருத்தங்களில் ஒரு மாத்திரை மிகுந்தும் குறைந்தும் வருகையால், இவ்விருத்தத்தின் பெயர் இதுவாமோ, எதுவாமோ, சொன்ன விதிக்கு விரோதிக்கின்றதென்று கவலைப்படாமல் அதுதானென்று துணிந்து சொல்லுக.

வாழ்ந்த நாளுமினி வாழு நாளுமிவை யறிதிரேல்
வீழ்ந்த நாளெம்பெரு மானை யேத்தாவிதி யில்லீர்காள்
போழ்ந்த திங்கட்புரி சடையி னுன்றன்புக லூரையே
சூழ்ந்த வுள்ளமுடை யீர்க ளுங்கடுயர் தீருமே
சம்பந்தர் - திருப்புகலூர் - பண் - செவ்வழி 2-7.

இதில் 'நாளெம்பெரு', 'யேத்தாவிதி,' 'திங்கட்புரி,' 'னுன்றன்புக,' 'ளுங்கடுயர்,' என்பன ஆறு மாத்திரைச் சீர்கள், 5 மாத்திரை வரவேண்டிய இடங்களில் வரினும், இது 8-வது வகைச் சந்தக் கலித்துறை யென்று கொள்க.

(ii) விதிகளுக்கு அடங்காத சந்த விருத்தங்களும் அவற்றின் தன்மையும்.

விதிகளுக்குப் புறம்மாய்க் காணப்படும் சந்த விருத்தங்கள் நமதுஇலக்கியத்தில் பல உள. அவற்றைநாம் குற்றமென்று நீக்கலாகாதபடி, அவை பெரியோர்பாடிய கவிகளில்உளவாம். அவற்றை மேற்கூறியவிதிகளில் கூட்டி அறியவேண்டும். அவை பின்வருமாறு:-

(i) கலிவிருத்த விலக்கணம் பெற்ற கழிநெடி லாசிரிய விருத்தங்கள்.

திருநாவுக்கரசு நாயனர் முதல் பதிகமாய்க் கொள்ளப்பட்ட "கூற்று யினவாறு" என்னும் திருப்பதிகத்தின் யாப்பைக் காண்போம். அதில் ஒவ்வொரு அடியும் எட்டுச் சீர் பெற்றுச் சந்த விருத்த இலக்கணத்தில் நிற்கும்.

கூற்று யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநா னறியேன்

என்னும் அடியானது ஒவ்வொரு சீரும் நான்கு மாத்திரை அளவு பெற்று நடக்கின்றதன்றோ. அத்தகை எண்சீர்ச் சந்தவிருத்த இலக்கணம் முன்னே சந்தக் கலிவிருத்தத்தில் காணப்பட்டதாகும். அதாவது காந்தி தோடக மென்னும் இருவகைச் சந்த விருத்தங்கள்—

நாலக் கரமுற் றுநடக் குமவை
நீலக் குழலாய் நிகழும் பலவாய்
நாலக் கரமா நவில்வேண் டளையில்
சாலப் பகர்வர் தமிழ்நா வலரே ‡
நிரைநேர் முதலா நிகழும் வகையா
னிருபா லவைதம் மியல்பென் றனரால்
நிரையே முதலா நிகழ்தோ டகமென்
றுரையும் பெயரோ டொளிர்காந் தியுமே ¶

* வறியா ரெனவல் லொலியோங் கலிலாக்
குறியே யெறியப் படுகொள் கையதே
செறிவேண் டுழியே நிலையா மதுவே
வறியா ரொருக்கால் வகையா குவபோல்.
—விருத்தப்பாவியல்

† அவ்வாறு நீக்காவிடில் வனமயூர விருத்த விதிக்கு இது விரோதமாய் முடியும். வனமயூர விருத்தமாவது முன் கூறியவாறு,

ஓர்நெடிலு முக்குறிலு முற்றசிறு முக்கா
யோர்நெடிலு மோர்நெடிலு முற்றதொரு தேமா
நேர்நிறைய மாகிலது நீள்வனம யூரப்
பேர்பெறுமெ னப்பகர்வர் பேரியநெ றிந்தோர்.
—விருத்தப் பாவியல்

‡ இது காந்திவிருத்தத்திற்கு உதாரணமான விருத்தம்
¶ இது தோடக விருத்தம்.

என்பன இரட்டி எண்சீர்ச் சந்த விருத்தங்களாய் நிற்கின்றன. அப்பர் சூலைநோய் தீர்த்த திருப்பதிகத்தின் முதல் செய்யுள் முதலசை நேரசையாதலால் காந்தியென்னும் சந்தக் கலிவிருத்தம் இரட்டித்து நிற்கும் எண்சீர்ச் சந்த விருத்தமாகும்.

"சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்"

என்பதில் நிரையசை முதலில் வந்தமையால் தோடகமென்னும் சந்தக் கலிவிருத்தம் இரட்டித்து வந்த எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தமாகும். மற்றும் சுந்தரர் தேவாரத்திலும் இத்தகைய சில காணலாம்:-

தொண்டர டித்தொழலும் சோதியி ளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
புண்டரி கப்பரிசா மேனியும் வானவர்கள்
பூசலி டக்கடனஞ் சுண்டக ருத்தமரும்
கொண்டலெ னத்திகழும் கண்டமு மெண்டோளுங்
கோலந றுஞ்சடைமேல்வண்ணமுங்கண்குளிரக்
கண்டுதொ ழப்பெறுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே

என்னும் காளையார் கோயில் திருப்பதிகத்தின் இலக்கணம்

முன்னது கூவிளமாய் மூன்றது மவ்வியலாய்ப்
பின்னது காயிறுதிப் பெற்றிடு கூவிளமாய்
அன்னது நான்கினையு மாடரு மென்றுணரே
நன்னுத லந்துவர்வாய் நாரியர் நாயகமே

என்னும் கலிச்சந்த இரட்டிப்பென் றுணர்க. முன்னர் அறுசீர்ச் சந்த விருத்தங்கள் இரட்டித்து வருவன தாயுமானர் பாடல்களிற் கண்டோம். பன்னிருசீர், பதினன்குசீர், பதினறுசீர், இவற்றின் இருமடங்கு மும்மடங்குள்ள அடவைச் சந்த விருத்தங்களும் நமது இலக்கியத்தில் சில விடங்களில் உள. அலகிட்டு அவற்றிற்குள்ள விதிகளைக் கண்டுகொள்க.

189170

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

6-ம் பத்து, 2-ம் தசகம்.

[811-வது பக்கத் தொடர்ச்சி]

(l) பந்தும்கழலும் தந்துபோகு-கிருஷ்ணன் இவைகளை அங்கும்இங்கும் விட்டெறிந்து ஆடியிருந்தான்; அதனை இப்பிராட்டி தவிர வேறே அவனுக்குப் பிரிய ஸஹிகள் பார்த்தால்தா னென்ன? யாதொரு ஸம்பவமும் கலகமும் விளையாது. பின் என்னென்றால்? இந்தஸந்தர்ப்பத்தை அர்த்தமாக்க, கிருஷ்ணன் தத்காலகதியைச் சற்று ஆராய்ச்சி செய்தால்தா னறியக்கூடும். "இப்பிராட்டியோ,இவன் யாரோவென்று கண்ணெடுத்துக்கூடச் சற்றுநேரம்பாராமலேஇருந்தாள். இவன் பந்தும் கழலுமெடுத்த பின்னரே கொஞ்சம் கடைக்கண்ணால் பார்க்காததுபோலப் பார்த்தாள்—இவனை அங்கீகரிக்கப்பதில்லையென்றும் யாது உணர்த்தினலும் தான் ஊடல் தெளிவதில்லை யென்றும் எண்ணியிருக்க இவள் தோழிமாரும் அவள் போலவே முகங் கொடாமலும் புதிதாய்ச் சிகேகிக்க வருவாரைஏற்கும் மாதிரியாகவே நடனம் செய்தார்கள். அவனுக்கு இவர்கள் உதவிகொண்டு நாயகியைப் அநுநயப்பிக்க மார்க்கமில்லாமல் போயிற்று. கிளி பூவைகளாவது கண்ணுவென்று கூப்பிட்டிருந்தால் அதன்மூலமாயாவது கடைத்தேறலாம். அவைகள் தோழிமார்களின் கையிலகப்பட்டு அவர்களால் தடவப்பட்டு ஆட்டம் காட்டப்பட்ட பின்னே, நாயகியின் கழகமேறப் பந்தும் கழலும் மாத்திரமே உதவ இருந்தன. அவைகளைப் பற்றித் தொட்டு எடுத்துக்கையால் தழுவித் தன் மெய் முழுவதாலும் ஸ்பரிசித்துத்தன் பிரிய கோபியே தனக்கு வாய்த்தால்போல் அவைகளை ஆவலுடன் முத்தமிட்டு ஆறுதவனாய், அவள் தன்கைகளுக்கு அகப்பட்டிருந்தால் என்னவென்ன லீலைகளைச்செய்து ஆசுவஸிப்பானோ அவற்றை எல்லாம் இவ்வசேதநங்களினிடத்தில் காட்டி ஒருவாறுதேறி ஆநந்தமடைந்தான். மேற்கூறிய கடைக்கண் - அபாங்க - வீக்ஷணத்தாலே கோபி பார்த்துத் தான் இவன்வேறு ஒரு பிரிய நாயகி பந்தென்று, பிரமிக்கின்றானென்று எண்ணங்கொள்ளத்தத்துவத்தில் இடமில்லையாயினும்குற்றங் குறைகூற நிமித்தம் - நின்னருள் சூடுவார் பந்து அல்லவென்ற எச்சரிக்கையும் தன் னிமித்தமே.

(m) இனி ஒன்று தெளிய உளது. இப்பிராட்டி தான்ஒருபேச்சுகூடப் பேசுவதில்லையென்ற முரட்டுப் பிணக்கில் இருப்பவள் தன்சங்கல்பம்விட்டுத் "தந்து போ"வென்று ஏன் சொன்னாள்? இது பேச்சு வளர முகம் வைக்குமென்று அவள் அறியலாமே?என்றால் ஸ்ரீ கிருஷ்ணன் வந்ததுமுதல் அங்குமிங்கும் சுழல்வதும், கிளி பூவைகளை எப்பிரகாரமாவது எடுக்க யத்தநிப்பதும், யாதாநும் கழகத்திற் சேரச் சூழ்ச்சி தேடுவதும் அது வாய்க்காது புத்திமுட்டி மனவேதனையால் ஆற்றாதவனாய் நலிவுபடுவதையும், தன்னோடு கலக்கவில்லையே என்ற வியஸநத்தால் பித்தேறித் தத்தளித்ததையும் இப்பிராட்டி கண்ணுற்றாள். நாயகியின் மனம் பரிதபித்ததினால் பேசத் தொடங்கினாள். "தந்துபோகு' என்றாவது சொன்னாளே! இது நமக்கு பெரும் வாய்ப்பு. இவள் துனியும் உணர்ப்பின்வரப் பணிமொழியின் உதவிகொண்டு கரையேறலாம் என்று ஒருவாறு துணிந்த கண்ணன் பந்தையே அவளாகப் பாவித்துச் சர்வ அவயவங்களாலும் தீண்டி ஆநந்தமடைந்தான் என்று காட்டுகிறார்.

(n) "தந்துபோகு" இச்சொல்களின் தொடர்பு கண்ணனுக்கு "உயிரை வைத்துப்போ" என்று கூறியதுபோல் அவனது மர்மத்தில் தைத்ததென்று ஓர் பிரஸித்த உரைகாரர் எடுத்துக் காட்டுகிறார்.

(o) "மாயவனே" என்ற சம்போதநம் "வஞ்சகன்" என்னும் பொருளில் பிரயோகித்தாளாகிலும் அவனிடத்தில் ஒருவாறு ஆதாரமும்தோன்ற இடமாயிற்று; ஆச்சரியமான சக்தியுள்ளவனை எப்படி விடுவது? அவன் வலையில் சீக்கிரமே தாம் அகப்பட்டு அவனுக்கு விதேயமாய்ப் போகப்போகிறோமென்ற கருத்தும்கூடத் தொனிக்கிறது.

(p) "போகு" என்று அறுதியிட்டுச் சொன்னாளே? கண்ணன் போய்விட்டால் என்னாவதென்று பயப்படவில்லையே என்றாலோ-கண்ணன் மனம்தன்னிடத்தில் ஊன்றி நாடியிருப்பதை இவள் நன்கு அறிந்தவளானதாலும்அதைத்தான் நிரந்தரம்ஆள்கைக்குஉரித்தானவளானதினாலும் தன்னைவிட்டுப் போகமாட்டானென்பது அவள் மனத்தில் திண்ணம். "போகு" என்று அவனுக்கு ஹிதம் கூறுவதுபோலச் சொல்

கிறபடி—அதாவது உன் மின்னிடை மடவார்கள் உன்னை உபேக்ஷிக்கத் துவக்குவதற்கு முன்னே சீக்கிரம் போ.

(q) ஸ்ரீ கிருஷ்ணனின் நிலைமையைப் பதப்பிரயோஜநம் வரையில் ஆங்காங்கு ஒருவாறு ஸூசிப்பித்தோம். இன்னம் சில குறிப்புக்கு வரத்தக்கதை இங்கு எடுத்த எழுதுவோம். ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஸர்வருக்கும்பிரியன். அவனின் பிரமாதிசயத்தினடியாகப் பற்பலர் பல பயன்களை அவனிடத்தில் யாசிப்பார்கள். அவன் எவ்வளவு ஸர்வ வியாபியானாலும் எல்லாவர்க்கும் குறையில்லாமல் ஒரே ஸமயத்தில் அவரெல்லாவரின் மனோ ராஜ்ஜியத்தின் வகைகளை நிர்வஹித்துச் சாதிக்க முடியாதன்றோ? இக்கருத்தை உட்கொண்டு நாரத மஹாரிஷி அவனது கௌமாரதெசை கழிந்தபிறகு துவாரகையில் இராஜ்ஜிய பாரம் செய்தபோது இவன் எண்ணிறந்த கோபிகைகளை மணந்தானே? அவர்கள் எல்லாருக்கும் குறைவில்லாமலும் அவர் தம்மில் சச்சரவுபடாமலும் எப்படிப் பிரஸாதம் அளிக்கிறானென்று ஆராய்ச்சி செய்து அறிவதன்நிமித்தம் இங்குமங்குமெங்கும் பற்பலமாளிகைகளில் புகுந்து ஸ்ரீகிருஷ்ணன் என்ன செய்கிறானென்றுபரிசோதித்தார். அவர்கண்ட காட்சி அவருக்கு அற்புதமாய்த் தோன்றிவிட்டது. ஓர் மாளிகையில்சொக்கட்டான்ஆடுவதாகவும்மற்றொருவிடத்தில் ஸங்கீதம் பாடவும், இன்னமொரு விடத்தில் நர்த்தனம் செய்யவும் இவ்வண்ணம் பற்பல கிரீடாகஸல்லாபங்கள் கண்டார். இவர் மணந்திருந்த இந்தக் கோபிமார்கள்எல்லோரும்ஸ்ரீராமாவதாரத்தில் இருடிகளாயிருந்து பகவானை மெய்தொட்டுக் கலந்து பூர்ணாநுபவத்துடன் ஆநந்தமடைய வேண்டுமென்றாசைப்பட்டார்கள். ஸ்ரீராமன் அதற்கிணங்கிக் கிருஷ்ணாவதாரத்தில் அவர்களது மனோரதத்தைப் பூர்த்தி செய்வதாக வாக்களித்தவர் மேல்கண்ட இருடிகளே கோபியர்களாகப் பிறந்து தங்கள் நாட்டப்படி தாங்கள் கோரிய புருஷார்த்தத்தை அடைந்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணாவதார ஸமாப்தத்தில் இந்த விடயம் பிரத்தியக்ஷமாயிற்று. கண்ணன் விஷ்ணு பதத்திற்கு ஏகும்போது அர்ச்சுனனை விளித்துத் தன் கோபி மனைவிகளை எல்லாம் அழைத்து உத்திரதேசத்திற்குக் கொண்டுபோக நியமித்தான். அவ்வண்ணமே அவர்களை எப்படிக் காப்பாற்றுவதென்று யாதொரு ஏற்பாடும் தோன்றாமல் தனக்கு வந்த ஆஞ்ஞைப்படி வடக்குத் திக்கே அவர்களைக் கூட்டிச் சென்றான். நர்மதா நதிக் கரை சேர்ந்ததும் கோபிகளெல்லாரும் நீராட ஏகினார்கள். நீராடி எதிர்க்கரைக்கு அவர்கள் ஏறியவுடன் அர்ச்சுனன் அவர்களைக் கண்ணுற்றபோது எல்லாரையும்மீசைதாடி ஜடைகளோடு தவம்செய்யும் ரிஷிகளாகக்கண்டான். அவர்களும் அர்ச்சுனனுக்கு மீளவிடை கொடுத்துப்போனார்கள். இச்சரித்திரம் மஹாபாரதத்தில் கூறியிருப்பதைச் சுருக்கமாக யாம் வரைந்துளோம். இது நிற்க, மற்றொரு ஸம்பவமும் துவாரகையில் ராஜ்ஜியபாரம்செய்கையில் நடந்ததைக்குறிக்கப் பொருத்தமாகிறது அதாவது, ஒருநாள் ஸ்ரீருக்குமணி பிராட்டி ஊடலின் காரணம்பற்றிக் கோபாக்கிரஹப்பிரவேசம் செய்தாள். கிருஷ்ணபகவானுக்கு இவ்விடயம் தெரியவந்ததும் தன் தேவி இருக்கும் அரண்மனைக்குள் பிரவேசிக்கச்சென்று அங்குப் படுக்கை அறைவாசலிலிருந்து காவல் தொழில் புரியும் ராணுவ வாயில் காப்போனை விளித்து 100 அடிக்கப்பால் காவல் நிற்க வேண்டுமென்று கட்டளை அளித்து உள்ளே சென்றான். ஸ்ரீருக்கு மணிதேவி தன்னை முனிந்து இடித்துக் கூறித் துஸ்ஸஹமான வாக்குப் பிரயோகங்கள் செய்வாள், என்று அநுமாநித்து அது வாயில்காப்போன் காதில் விழப்படாதென்று முன்கூட்டியே செய்த சூழ்ச்சி இது. பிறகு நெடுநேரம் சென்றாலும் தேவியின் ஊடல் தீராததால் அவனே அவளின் திருவடிகளை வருடி ஸமாதானம் செய்துகொண்டு சொஸ்தசித்தனாய் ஆத்மாதாரணத்தைப் பெற்றான். இதை யாம் இங்கே விவரிக்க ஓர் காரணமுளது.

அது என்னென்னில்-இவ்வுரையின் தலைப்பிலெழுதிய பொழிப்புரைகாரர் தமது மேற்கண்ட உரையில், "ஐயோ, கிருஷ்ணன் இப்பிராட்டி செய்கின்ற ஆலவியத்தை ஸஹிக்கவும், அவளது கொடுங் கூற்றங்களைக் கேட்கவும் அவள் நடாத்தும் அவமரியாதையைக் கண்ணோட்டஞ் செய்யவும் அவள்மேலுள்ள ஆசாபாசத்தால் பிச்சேறி அவளால் துர்த்தெசைகளை அநுபவிக்கவும் நேரும் என மனம்நொந்து பல சூழ்ச்சி செய்து எவ்விதத்திலாவது உய்ந்து தப்புவானாய் முயற்சிக்கவேண்டுமோ வென்று கருத்துட்கொண்டு "இப்பிராட்டியின் தோழிமார்கள் அநங்கீகார தெசையிலிருந்ததுபற்றி அவர்களைப்புருஷாகாரமாக்கிக் கொண்டு இப்பிராட்டியின் திருவடிகளிலேவிழுந்து ஸ்வர அபராதத்தை க்ஷமிப்பித்து ஸம்ஸ்லேஷம் (கலப்பு)செய்து தாரணம் பண்ணுதல்" என்பதையே இத்தேவியின் ஊடல்தீர முக்கியமான பிரதமயோஜனையாய் எடுத்து வரைந்திருக்கின்றார். பகவானின் மஹாஸந்நிதானத்தில் புகழ்பாடுவதன்றியில் வேறே எவ்விதப் பிரசங்கமும் மிகையாகுமென்று மனோ நிச்சியமுள்ள இம்மஹான், கண்ணன் இப்பத்துப் பாசுரங்களில் விவரித்துள்ள துர்த்தசையை அநுபவிப்பதைக் காட்டிலும் இவற்றையெல்லாம் மேற்படி ஏக மூலிகாப்பிரயோகமான திருவடிகளைச் சேர்ந்து சரணாகதி செய்தலை அநுஷ்டிக்காமல்இப்படிப்படுவானோவென்ற காருணியத்தாலும் பரிவினாலும் தூண்டப்பட்டுத் தன் மரியாதையை அதிக்கிரமித்துத் தம் திருவாய்க்குப்போட்டிருந்த பூட்டை அவிழ்த்து இவ்வுரை எழுதலாயினார். யாம் அவ்விடத்தில் அவர் விண்ணப்பத்தை யதாப்பிரகாரமெழுதநடுங்கி அவ்விடத்தில் எழுதாமலொழிந்தோம். மேல்படி மஹான் திருவுள்ளத்தில், ஸ்ரீ ருக்மணிதேவியின் ஊடல் தீர்த்தது தன் சௌரிய பரிபக்குவகாலத்தில் நேர்ந்ததுஎன்றும் இப்போழ்து கௌமார தெசையில் கைப்பழக்கமில்லாமையாலும் இளவயதில் முதிர்ச்சியுந் தேற்றமு மறிவுமில்லாததினாலும் தப்பித் தெற்றிவிட்டானென்றும் பரிதமித்து எழுதியாக நாமெல்லோரும் கருதுவது உசிதம்.

ஸ்வாபதேசம்:—ஆழ்வாருடைய முக்குணங்கள் ஸத்துவரஜஸ்தமஸ், கலந்த சரீரத்தையும் (மூன்று வர்ணமுள்ள பந்து), இந்திரிய பஞ்சகத்தையும் (ஐந்து கழல்கள்) அவன்றன் விஷயமாக அபிமாநித்து விரும்பினபடி நிலைநிற்கச் செய்யவேண்டுமென்று பிரார்த்தனை. அவனது குணாதிசயத்தில் விழச் சம்மதியில்லையாயின ஜகதீசனை அவன் அறவறுத்துவிட்டுப் போகட்டுமென்ற திருவுள்ளத்தை இப்பாசுரத்தில் உரைத்தபடி.

ஆழ்வார் கீழ்ச்சென்ற "வைகல் பூங்கழிவாய்" தசகத்தில், விசேஷ தூதர்களாக "வேறு கொண்டு' (Special) மற்றவர்களுக்கு அமைய இயலாத அதிசதுரமும் ஸாமர்த்தியமும்உள்ளவர்களாக அன்னங்களைத் தூதுவிட்டார். அவற்றை இரந்துதாழ்ந்து யாசித்துப் பகவானை அநுநயித்துப் பிரஸாதம் கேட்டார். இதற்கு இணங்காததினால் கோபாவேசத்தால் மேற்குறிப்பில் தன்னைவிட்டு அபேக்ஷித்தபடி.

ஞான தீபம்

[810-வது பக்கத் தொடர்ச்சி]

தற்போழ்துசெய்துமுடித்தற்கரியதாகத் தோன்றுவது பின் ஒருசமயத்தில் செய்துமுடிக்கக்கூடியதின் அறிகுறியாவது போலும்.

கஷ்டசாத்திய மென்ற உணர்ச்சியினின்றுதான் நிறைவேற்றம் என்ற சிந்தனை எழுகின்றது. பிரபஞ்சமானது அநித்யத்வமும் விபரீத விசித்திரங்களும் பொதிந்தும் புதைந்தும் உள்ளதாகத் தோன்றுவதினாற்றான், நித்யத்வமும் சீரும் சக்தியும் ஞானமும் கருணையும் நிரம்பியுள்ள பூர்ணவஸ்துவால் அது உண்டாகிப் பரிபாலிக்கப்பட்டு வருவது என ஊகித்தற் கியல்கின்றது.

மன்பதைகளனைவரும் திருந்தி உயர்ந்துசீர்பெற்று விளக்கமுறவேண்டுமெனக்கருதுவாயாகில், பொருளும் பொருத்தமும் பயனுமற்ற கற்பனைகளையும் கிரியைகளையும், மறந்து விட்டுவிடும்படி செய்வாயாக. பின்னேதான், துல்லிய சிந்தனைகள் மேம்பட்டு உரம்பெற்றுச் செழிப்புடன் வளர்ந்து, மக்களனைவரையும் சுகிர்தநிலையில் அமர்த்தக்கூடும். இல்லையானால், இயந்திரங்கள்போல், சிந்தித்தவைகளையே சிந்தித்துச் செய்தவைகளையே செய்து, இழிய பாவனைகளால் கவரப்பட்டுச் சோம்பித்திரிந்து, அல்லது அவமே இருந்து, சக்தியைஇழந்துவாணாளை வீணாளாகக்கழிப்பார்கள்.

தன்னையே சுற்றிக்கொண்டிருப்பதில், அதாவது சிறுகிய அறிவையும் குறுகிய தொழிலையும் இடுகிய நோக்கத்தையுமே பற்றி உழல்வதில் சிறப்பும் உபயோகமும் ஒன்றுமில்லை காண்! அகண்ட அகாத ஞானசூரியனை நோக்கி உழைப்பாயாக.

உட்சக்தியையும் போக்கையும் ஆக்ஞையையும் முதலில் கவனித் தறிவாயாக. கர்மங்களில் பின்னே பிரவிர்த்திப்பாயாக.

சக்திநிரம்பிய நற்சிந்தனையேதான் உலகம் உலகாதிகளின் படைப்புக்கும் பரிபாலனைத்திற்கும் அடிக்கோலாவது. சித் சக்தியின் இயக்கத்தினாற்றான் இப்பூதவுலகம் தோன்றி இருந்துவருகின்றதுபோலும்.

சிந்தனைகளுக்குத் தக்கவாறுதான் நாம் வளர்கின்றோம். அகத்தில் எதை எவ்வாறு நோக்குகின்றோமோ, அதையே முறைப்படி புறத்திலும் காண்கின்றோம்; அதாவது, நம்முடைய உள்ளக் கருத்துக்களேதான் உருத்தாங்கி வெளியில் தோன்றுவன. சித்த அமைப்பிற்கும் போக்கிற்கும்ஆனபடியேதான் இவ்வுலகாதிகளை ஒவ்வொரு ஆன்மாவும் உற்று ஆராய்ந்து அறிகின்றது.

திட நற்சிந்தனையால் தூண்டப்படுவனவெல்லாம், ஒருகாலத்தில், நம்மால் இயற்றப்படக்கூடும்.

கற்பனா சக்தியினாலும், நம்பிக்கையினாலும், துல்லிய நோக்கத்தினாலும் தூண்டப்பட்டு, மனோவுறுதியும் விசாரிப்பும் பணிகளுமான கருவிகளைக் கொண்டு, காலமும் உலகமுமான கழனியில், ஆன்மப் பயிர் செய்வோமாயின், எழிலும் தூய்மையும் சத்தியமும் ஞானமும் ஆனந்தமும் பெற்று உய்வோம்.

அன்பு உலாவவேண்டிய இடத்தில், துவேஷமும் தன்னலச் சிந்தனையுமே நிலவி நிற்கின்றன; ஞானத்திற்குப் பதிலாகப் பொய்யும் தவறும் புலனுணர்ச்சியும் மனோராஜ்ஜியங்களுமே வியாபித்து வருகின்றன; சாந்தியும் ஆனந்தமும் பெற்று அநுபவிக்க முயற்சிக்காமல், வீண் நடிப்புக்களையும் பாராமுக நடத்தையையும் ரமித்தற்கான வழிகளையுமே பெருக்கி வருகின்றோம்; சக்திக்குப் பதிலாகக் கோழைத்தனமும் வீண் உழைப்பும் டாம்பீகமுமே நம்முன் நாளுக்குநாள் பூரித்து வருகின்றன; நித்ய வாழ்வுக்குப் பதிலாக இழிய ஜனன மரணங்களுக்கு உள்ளாக்கும் வழிகளில் ஜீவகாலத்தைக் கழித்துவருகின்றோம். ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும் சுபிக்ஷத்திற்கும்பதிலாகப் போர் கொலை களவு வஞ்சகங்களையே பரப்பும் கூட்டுறவுகளையும் சங்கங்களையும் நாடி ஸ்தாபித்து உழைக்கின்றோம். பரிதபிக்கத்தக்க இந்நிலையில் அழுந்திக்கிடக்கும் உலகினரைப்பார்த்து, "சிந்திப்பதற்கும் செய்தற்கும் இவ்வுலகில் யாதொன்றுமில்லை. எக்காலத்திலும் எவ்விதத்தினாலும் அப்புல்லறிஞரைத் திருத்தி உயர்த்தற்கியலாது" எனப்பாவித்துக்கூறுதலும், கைகட்டி அவமே இருத்தலும், நன்றோ?

சுருக்கத்தில், நாமெல்லோரும் சச்சிதானந்தப் பிழம்புகளாவோம். ஆதலால், உயர்ந்து திகழ்ந்து அவ்வுண்மையை நம்முடைய குண நடத்தைகள் வாயிலாக நிரூபிக்கவேண்டும்.

முரணுற்றுத் தோன்றும் பிரபஞ்சாதிகளை விளக்கக்கூடாததும், மதியின் அயர்ச்சியால் கற்பிக்கப்பட்டதுமான ஓர் கேவலப் பொருளன்று ஈசன். ஆனால் கிருபையும் ஆனந்தமும் சர்வஞ்ஞத்வமும் ததும்பியோடப்பெற்ற பண்பியாம்.

எண்களையும் அவைகளின் இணக்கத்தையும் இயக்கமுறையையும் அறிய விரும்பி விதம்விதமான விதிகளைக் கற்பித்து மேலும் மேலும் ஆராய்ந்து, இறுதியில், சர்வமும் ஓர் சூன்யத்தின், அல்லது கேவல ஏகத்தின் மாயா ரூப இயக்கங்களென முடிக்கச் செய்யும் கணித வழியை இப்பிரபஞ்சம் ஒத்ததன்று; அல்லது, இடைவிடாது சுழன்று ஓடியாடி ஏதோவொரு நிலை எய்துதற்குப் பிரயத்தனிக்கும் மூர்க்க சக்தி யணுக்களின் குருட்டு இயக்கத் தோற்றமன்று. ஆனால், அது ஆனந்தத்தின் காட்சியாகும்; பாலரின் விளையாட்டுப் போன்றதாகும்; கற்பனாசக்தி மிகுதியினால் நிருமிக்கப்படும் கவியின் சிருஷ்டிகளை ஒத்ததாகும்.

எண்களின் இணக்கத்தை ஆராயும் கணித சாஸ்திரிகளையும், விஷயாதிகளின் போக்கையும் நியமங்களின் கருத்தையும் மூல சக்தியின் இயக்கங்களையும்

ஊன்றிப் பார்த்தறியும் வித்தகரையும் ஜகதீசன் ஒருவாறு ஒத்திருப்பினும், உண்மையில், அன்பு நிரம்பிய காதலனையும், பற்பல இனிய கீதங்களை எழுப்பித் தன்வயப்படுத்தும் பாடகனையும், நிஷ்கபட நிஷ்களங்கக் குழந்தையையும், அதி விநோதக் காட்சிகள் பலவற்றைக்கற்பிக்கும் கவிஞனையும் போன்று, மற்று, சர்வத்திற்கும்அடியும்முடியுமாக விளங்குபவனுவன்.

சிந்தனைகளும் கர்மங்களும் தெய்வானந்தமாகிய சுவாசத்தினல் நிரப்பப்படாதவரையிலும் அவைகள் பொலிவும் பிரயோஜனமு முற்றனவாகா. தெய்வானந்த சக்தி நிரம்பப்பெருத உருவங்கள் வெற்றுருவங்களும் இழிய கற்பனைகளுமாவன போலும். அவைகளெல்லாம்பிரதிபிம்பங்களாவன, ஆனந்தம் பிம்பமாவது. பரிபூர்ணமே மூலவஸ்து போலும். அதிசூக்ஷம விதிகளெல்லாம் உண்மையை ஒருவாறு புலப்படுத்தலாம். ஆனல், பண்பிப் பொருள்கள் அல்லது பிம்பங்களும் பிரதிபிம்பங்களுமேதான் சத்தின் குணத்தையும் போக்கையும் தன்மையையும்முடிவையும் பூர்ணமாக அறிவுறுத்துவன போலும்.

பிரபஞ்சமானது சித்தின் பிம்பமாயின், சித் என்பது ஆனந்தத்தின் ரூபமாகும்.

நிரந்தர வஸ்து உள்நோக்கவே பேரானந்தம் ததும்பிற்று. இப்பேரானந்தமே காட்சி உலகாய் வியாபித்துளது போலும்.

உள்ளே பரிணமித்து நிற்கும் ஞானத்தையும் ஆனந்தத்தையும் ஊகித்துணர்ந்து ஒவ்வாது, அவைகள் தனக்குப் புறம்பாகவுள்ளனவென மருண்டு நாலா பக்கங்களிலும் ஓடி யாடிக் கெடலேதான் மரணம் என்பது.

தமிழ்ப்பாடம் 96.

அஷ்ட பிரபந்தம்—திருவரங்கக் கலம்பகம்

[815-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்தந்தாதியிற் சில செய்யுள்கள் கற்ரேம்.

இதன்மேல், அஷ்டபிரபந்தத்துள் அடங்கிய மற்ருெரு பிரபந்தமாகிய திருவரங்கக் கலம்பகத்திற் சில செய்யுள்களைக் கற்போம். கலம்பகமாவது, பற்பல விதமான செய்யுள்களால் பாட்டுடைத் தலைவனது (hero) புகழையும் பெருமையையும் அருமையையும் பற்பல விதமாகக் கூறிப் பாராட்டும் நூலாகும். திருவேங்கடமாலையிலுள்ள செய்யுள்களெல்லாம் 'வெண்பா' என்னும் ஒரேவித செய்யுள்களால் ஆனவை. திருவரங்கத்து மாலையிலும் திருவரங்கத் தந்தாதியிலும், வந்துள்ள செய்யுள்கள், கட்டளைக்கலித்துறை என்னும் ஒரே விதத்தன. கலம்பகத்திலோ செய்யுள்கள் இப்படி ஒரேவிதமாக இரா. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என்னும் பாக்களும் இவைகளது இனமாகிய விருத்தம், துறை, தாழிசை முதலிய செய்யுள்களும் கலந்துவரும். 'மாறன் பாப் பாவினம்' என்னும் நூலை நம் பத்திரிகையில் பதிப்பித்து வந்தபோது, செய்யுள்களில் எத்தனை விதங்கள் இருக்கின்றன என்பதை ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கலாம். இப்பொழுது எழுதி முடிகின்ற யாப்பிலக்கணத்தினின்றும், ஸ்ரீமான் தணிகாசல முதலியார்தம் கட்டுரைகளினின்றும் அவைகளைப் பற்றி நன்கு கற்றிருப்பீர்.

இந்தக் கலம்பகத்தின் தலைவன் திருவரங்கநாதன். தானேர் விண்ணப்பம் செய்துகொள்வதற்காகக் கவி ஸ்ரீரங்கநாதனைக் கூப்பிடுவதும், கூப்பிட்டு அவ்விண்ணப்பத்தைச் செய்துகொள்வதும் முதற்செய்யுளில் அடங்கியிருக்கின்றன. எம்பெருமான் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் வைபவத்தை இனிது பாராட்டி முதலில் அழைக்கின்ருர்.

சீர்பூத்த செழுங்கமலத் திருத்தவிசில் வீற்றிருக்கு
நீர்பூத்த திருமகளு நிலமகளு மடிவருடச் [கேட்ப
சிறைப்பறவை புறங்காப்பச் சேனையர்கோன் பணி
நறைப்படலைத் துழாய்மார்பி ஞயிறுபோன் மணி
[விளங்க
வரியதான வர்க்கடிந்த வைம்படையும் புடைதயங்கக்
கரியமால் வரைமுளரிக் காடீன்று கிடந்தாங்குப்
பாயிரநான் மறைபரவப் பாற்கடலுட்பருமணிச்சூட்
டாயிரவாய்ப் பாம்பணைமே லறிதுயிலி னினிதமர்ந்
[தோய்

பதப்பிரிவு:—சீர் பூத்த செழும் கமலம் திரு தவிசு இல் வீற்றிருக்கும் நீர் பூத்த திருமகளும் நிலமகளும் அடி வருட, சிறை பறவை புறம் காப்ப, சேனையர் கோன் பணி கேட்ப, நறை படலை துழாய் மார்பில் நாயிறுபோல் மணி விளங்க, அரிய தானவர் கடிந்த ஐ படையும் புடை தயங்க, கரிய மால் வரை முளரி காடு ஈன்று கிடந்த ஆங்கு, பாயிரம் நால்மறை பரவ பால் கடலுள் பரு மணி சூட்டு ஆயிரம் வாய் பாம்பு அணைமேல் அறி துயிலின் இனிது அமர்ந்தோய்.

பதவுரை.

சீர்-சிறப்பு, பூத்த-பொருந்திய, செழு-செழுமையான, திரு-அழகிய, தவிசுஇல்-ஆதனத்தில், வீற்றிருக்கும் - பெருமையோடு அமர்ந்திருக்கின்றவளும், நீர்-கடலில், பூத்த-அவதரித்தவளும் ஆகிய, திருமகளும்-இலக்குமியும்; நிலமகளும்-பூமிதேவியும், அடி-(உனது) பாதங்களை, வருட-தடவவும்—

சிறை-சிறகுகளை உடைய, பறவை - பறவையாகிய கருடன், புறம்-(உன்) பக்கத்திலிருந்து, காக்க-காவல் புரியவும்—

சேனையர் - பரமபதத்தில் இருக்கும் நித்தியசூரிகளுக்கு, கோன்-தலைவராகிய சேனைபதி முதலியார், பணி-(நீ இட்ட) வேலைகளை, கேட்ப - கேட்கவும்—

நறை - தேன் பொருந்திய, படலை - மாலையாகிய, துழாய் - துளசியால் அலங்கரிக்கப்பெற்ற, மார்பில்-(உனது) மார்பில், நாயிறுபோல் - சூரியனைப்போல், மணி - கவுஸ்துபம் என்னும் இரத்தினம், விளங்க - பிரகாசிக்கவும்—

அரிய - வெல்வதற்கு அருமையான, தானவர் - அசுரர்களை, கடிந்த - அழித்த, ஐம் - (உனது) ஐந்து, படையும் - ஆயுதங்களும், புடை - பக்கத்தில், தயங்க - விளங்கவும்—

பாயிரம் - ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை முதலில் பாயிரமாகச் சொல்லப்படுகின்ற, நால்-நான்கு, மறை - வேதங்களே, பரவ - (உன்னைச் சுற்றிநின்று) தோத்திரம்செய்துகொண்டிருக்கவும்—

கரிய - கருமையான, மால் - பெரிய, வரை - மலையொன்று, முளரி - தாமரையாகிய, காடு - காடு, ஈன்று - பூத்து, கிடந்தாங்கு - கிடப்பதுபோல,

பரு - பெரிய, மணி - மாணிக்கங்களை, சூட்டு - கொண்டையில் உடைய, ஆயிரம் - ஆயிரம், வாய் - வாய்களோடு கூடிய, பாம்பு - ஆதிசேடனுகிய, அணைமேல் - படுக்கையின் மேல்,

பால் கடலுள் - பாற்கடலில், அறி - எல்லாவற்றையும் அறிந்துகொள்ளும், துயிலின் - யோக நித்திரையில், இனிது - இனிமையாக, *அமர்ந்தோய் - இருக்கின்ற திருமாலே!

குறிப்பு:—இவ்விதம் திருமாலை அழைத்த கவி, அவனது விக்ரகரூபமாக அரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானை, இனிப் பின்வருமாறு அழைக்கின்ருர்:—

மண்ணகந் துயர்நீங்க வானகந் தொழுதேத்தக்
கண்ணகன் சோணுட்டுக் காவிரிவாய்ப் புளினத்துப்
பம்புகதிர் விசும்பிரவிப் பசும்புரவி வழிவிலங்கு [யி
செம்பொன்மதி லேழுடுத்த திருவரங்கப்பெருங்கோ
லாணிப்பொற் றகடுரிஞ்சு மணிக்கதவ நீள்வாயின்
மாணிக்க வெயில்பரப்பும் வயிரமணி விமானத்துண்
மின்னிலங்கு தொடிவலய வியன்வலக்கை கீழ்கொடுத்
[துத்
தென்னிலங்கைத் திசைநோக்கித் திருநயனந் துயில்
[வோய்கேள்.

பதப்பிரிவு:—மண் அகம் துயர் நீங்க வான் அகம் தொழுது ஏத்த கண் அகல் சோழ நாட்டு காவிரிவாய் புளினத்து பம்பு கதிர் விசும்பு இரவி பசும் புரவி வழி விலங்கும் செம்பொன் மதில் ஏழு உடுத்த திரு அரங்கம் பெரும் கோயில் ஆணி பொன் தகடு உரிஞ்சும் அணி கதவம் நீள்வாயில் மாணிக்கம் வெயில் பரப்பும் வயிரம் மணி விமானத்துஉள் மின் இலங்கு தொடி வலயம் வியன் வலம் கை கீழ் கொடுத்து தென் இலங்கை திசை நோக்கி திரு நயனம் துயில்வோய் கேள்.

பதவுரை.

மண் அகம் - பூலோகத்தில் இருப்பவர்களுடைய, துயர் - துன்பங்கள், நீங்க - நீங்கவும்; வான் அகம் - வானலோகத்திலுள்ள தேவர்கள் வந்து, தொழுது - வணங்கி, ஏத்த - துதிக்கவும்,

கண் அகல் - இடம் அகன்ற, சோழ நாட்டு-சோழ நாட்டில் பாயும், காவிரிவாய் - காவேரிநதியின் நடுவில் உள்ள, புளினத்து - மணல் திட்டையாகிய திருவரங்கத்திலே—

பம்பு-மிகுகின்ற, கதிர்-கிரணங்களை உடையதாய், விசும்பு - ஆகாசத்தில் செல்கின்ற, இரவி - சூரியனது, பசும் - பச்சை நிறமுள்ள, புரவி - குதிரைகள், வழி-தாம் செல்லும் வழியிலிருந்து, விலகும் - விலகிப்போகின்றபடி செய்யும், செம் - சிவந்த, பொன் - பொன்னுலாகிய, மதில் - மதிற்சுவர்கள், ஏழு - ஏழு, உடுத்த - சூழ்ந்திருக்கின்ற, திரு - அழகிய, அரங்கம் - அரங்கம் என்னும், பெரும் - பெரிய, கோயில் - கோயிலில்—

ஆணிப்பொன் - ஆணிப்பொன் என்னும் மிகவும் சிறந்த பொன்னுலாகிய, தகடு - தகடுகள், உரிஞ்சும் - பதிக்கப்பெற்ற, அணி - அழகிய, கதவம் - கதவுகளை உடைய, நீள் - நீண்ட, வாயில் - கோபுரவாயிலில், மாணிக்கம் - மாணிக்கத்தினது, வெயில் - பிரகாசத்தை, பரப்பும்-வீசுகின்ற, வயிரம் - வயிரமும், மணி-மாணிக்கமும் இழைத்த, விமானத்துள்-விமானத்தினுள்ளே—

தொடி - கங்கணமும், வலயம்-கடகமும் அணிந்த, வியன் - பெரிய, வலக்கை - வலது கையை, கீழ் கொடுத்து - (உனது தலையின்) கீழே வைத்துக் கொண்டு, தென் - தெற்கில், இலங்கை - இலங்காபுரியிருக்கின்ற, திசை-திசையை, நோக்கி - பார்த்தவண்ணமாய், திரு - அழகிய, நயனம் - கண்கள், துயில்வோய் - வளர்கின்றவனே! கேள் - அடியேன் சொல்வதைக் கேட்டருள்.

குறிப்பு:—இதன்பின் வரும் பல அடிகளை விட்டுவிட்டோம். இவ்விதம் திருமாலையும், அத்திருமாலின் விக்ரக உருவமான திருவரங்க நாதனையும் கூப்பிட்டுக் கவி தனது விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொள்கின்ருர்:—

மலர்தலை யுலகத்துப் புலமை சான்ற
பதின்மரும் பணித்த பாட லோதையொடு
முதுமறை கறங்க முரச மார்ப்ப
வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில்
ஆழியஞ் செல்வ வாதியம் பரம
வாழி வாழி மாயோய் வாழி
நெடியோய் வாழி நின்மாட் டொன்றே
அடியேன் வேண்டுவ தஃதுநீ மறுக்கேல்
பூவரு மயன்முதல் யாவரு மறியா
மூவுல களந்தநின் சேவடி வாழ்த்தித்
தொழுதகைத் தொண்டர்தந் தொண்டருட்
[சேர்க்கா
தெழுவகைத் தோற்றத் தின்னுப் பிறப்பின்
என்பொழி யாக்கையுட் சேர்ப்பினு மவர்பால்
அன்பொழி யாமை யருண்மதி யெனக்கே.

பதப்பிரிவு:—மலர் தலை உலகத்து புலமை சான்ற பதின்மரும் பணித்த பாடல் ஓதையொடு முதுமறை கறங்க முரசம் ஆர்ப்ப வலம்புரி பிளிறும் பொலம்புரி கோயில் ஆழி அம் செல்வ ஆதி அம் பரம வாழி வாழி மாயோய் வாழி நெடியோய் வாழி நின்மாட்டு ஒன்றே அடியேன் வேண்டுவது அஃது நீ மறுக்கேல், பூ வரும் அயன் முதல் யாவரும் அறியா மூ உலகு அளந்த நின் சே அடி வாழ்த்தி தொழுத கை தொண்டர்தம் தொண்டருள் சேர்க்காது எழு வகை தோற்றத்து இன்னு பிறப்பின் என்பு ஒழி யாக்கையுள் சேர்ப்பினும் அவர்பால் அன்பு ஒழியாமை அருள் மதி எனக்கே.

பதவுரை.

மலர் - அகன்ற, தலை - இடத்தை உடைய, உலகத்து - உலகத்தில், புலமை - அறிவு, சான்ற - மிகுந்த, பதின்மரும் - பத்து ஆழ்வார்களும், பணித்த - அருளிய, பாடல்-பாசுரங்களைப்பாடும், ஓதையொடு-ஒலியுடன்; முது - பழமையான, மறை - வேதங்களை ஓதுகின்றவர் செய்யும் ஒலியும், கறங்க - ஒலிக்கவும்; முரசம் - பேரிகைகள், ஆர்ப்ப - சப்திக்கவும்,

வலம்புரி - வலம்புரிச்சங்குகள், பிளிறும் - ஆரவாரம் செய்யப்பெறும், பொலம்-பொன்னால், புரி-அமைக்கப்பட்ட, கோயில் - திருவரங்கக் கோயிலில் அமர்ந்த,

ஆழி - சக்கிராயுதத்தை உடைய, அம் - அழகிய, செல்வ - செல்வனே! ஆதி - ஆதிமூலமாகிய, அம் - அழகிய, பரம - பரமனே! வாழி வாழி - வாழ்வாயாக, வாழ்வாயாக! மாயோய் - மாயவனே, வாழி - வாழ்வாயாக! நெடியோய் - நீண்டவனே, வாழி-வாழ்வாயாக.

அடியேன் - அடியவனாகிய நான், நின்மாட்டு - உன்னிடத்தில், வேண்டுவது - வேண்டுகின்ற வரம், ஒன்றே-ஒன்றுதான். அஃது - அதனை, நீ - நீ, மறக்கேல் - தராமல் மறக்காதே, (அது யாதெனில்)

பூ - தாமரையில், வரும் - தோன்றிய, அயன்முதல் - பிரம்மன் முதல், யாவரும் - ஒருவரும், அறியா- கண்டு அறிய முடியாததும், மூ - மூன்று, உலகு - உலகத்தையும், அளந்த - அளந்ததுமான, நின் - உன்னுடைய, சே - சிவந்த, அடி - பாதத்தை, வாழ்த்தி - வாழ்த்தி, தொழுது - தொழுதவண்ணம் இருக்கின்ற, கை - கைகளையுடையவர்களாய, தொண்டர் தம் - (உனது) அடியார்களது, தொண்டருள் - அடியார்களுள் ஒருவனைப், சேர்க்காது - என்னைச் சேர்க்காமல்,

எழுவகை - (தேவர் மனிதர் பறவை விலங்கு ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்ற) ஏழுவகையான, தோற்றத்து - தோற்றத்தை உடைய, இன்னா - துன்பத்திற்கிடமான, பிறப்பின் - பிறவிகளில், என்பு - எலும்பு, ஒழி - இல்லாத, யாக்கையுள் - உடலாகிய புழுவினுள், சேர்ப்பினும் - என்னை மறுசன்மத்தில் சேர்த்தாலும்,

அவர்பால் - அந்தத் தொண்டரது தொண்டர்களிடத்தில், அன்பு - எனது பக்தியானது, ஒழியாமை - நீங்காததாகிய, மதி - புத்தியை, எனக்கு - எனக்கு, அருள் - கொடுப்பாய்.

இலக்கணம்

மொழிக்கு இறுதியில், க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய்களின் ஒன்றின்மேல் ஏறிநின்று ஒலிக்கின்ற உகரம், எப்பொழுது தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரையளவே ஒலிக்கின்றதோ அப்பொழுது அந்த உகரம், குற்றியலுகரம் என்று அழைக்கப்படுகின்றது. அம்மொழி, வீடு, காது, ஆறு, என்பனபோல், இரண்டே எழுத்துக்களை உடையதாயின் முதலெழுத்து நெடிலாக இருந்தால்தான், ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரம் ஆகும். ஆதலின் பசு மடு என்பனபோன்ற சொற்களின் ஈற்றிலுள்ள உகரம், ச், ட் என்ற வல்லின மெய்யின்மேல் ஏறியிருப்பினும் (முதலெழுத்து, ப ம என்னும் குறில்களாதலால்) குற்றியலுகரம் ஆகாது; அது ஒரு மாத்திரையுடைய முற்றியலுகரமே.

இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆனசொற்களில், (மற்ற எழுத்துக்கள் நெடிலாயிருப்பினும் குறிலாயிருப்பினும் நெடிலும் குறிலும் கலந்திருப்பினும்) ஈற்றில் வல்லின மெய்யின் மேல் ஏறிநிற்கும் உகரம், குற்றியலுகரமே. அவ்வாறு ஏறிநிற்பது வல்லினமெய் அன்றாகில், அவ்வுகரம் குற்றியலுகரம் ஆகாது. கதவு, களவு, மகவு போன்ற சொற்கள் இரண்டெழுத்திற்கு மேற்பட்டனவாயிருந்தாலும், உகரம் ஏறியிருக்கும் வ் என்னும் மெய், வல்லினத்தைச் சேர்ந்தது அன்று, அது இடையினமாகும். ஆகையால் அதன்மேல் ஏறியிருக்கும் உகரம் ஈற்றிலிருந்தாலும், அது குற்றியலுகரம் ஆகாது; முற்றியலுகரமே. அவ்விதமே, எழு, என நெடிலை முதலாக உடைய இரண்டெழுத்து மொழியாயினும் ஈற்றுகரம் ஏறியிருக்கும் மெய் வல்லின மல்லாது, ழ் என்னும் இடையினமாதலால், அந்த உகரம் முற்றியலுகரம்.

கொழு, உரு, தெரு, உழு, போன்ற சொற்களில், ஈற்றிலுள்ள உகரம், (வல்லின மெய்யின்மேல் ஏறியிராததாலும், அச்சொற்கள் இரண்டு குறில்களால் அமைந்திருத்தலாலும்,) முற்றியலுகரம்; குற்றியலுகரம் ஆகாது.

எனின், உகரம் இருவகை ஆகின்றது. ஒன்று உயிராகிய முற்றியலுகரம்; மற்றது அவ்வுயிரின் சிதைவாகிய குற்றியலுகரம்.

நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உயிர்களே வருமாயின் அவை உடம்படுமெய் பெற்றுப் புணர்கின்ற விதிகளை முன் கற்றோம். மற்று, நிலைமொழியிறுதியில் இருப்பது உகரம் ஆயின், புணர்ச்சி விதிகள் பெரிதும் வேறுபடுகின்றன. அவைகளைக் கற்போம்.

பொதுவாக இரண்டு விதிகளை மனதில் வைத்துக் கொள்ளலாம்:—

i நிலைமொழி யிறுதியில் முற்றியலுகரமும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் நிற்குமாயின் அவை வகர உடன்படுமெய் பெற்றுப் புணரும்:—

பசு + எங்கே = பசு வ் எங்கே = பசுவெங்கே.

கொழு + அமர்ந்தான் = கொழுவ் அமர்ந்தான் = கொழுவமர்ந்தான்.

புழு + ஓடியது = புழு வ் ஓடியது = புழுவோடியது.

ii நிலைமொழி யிறுதியில் குற்றியலுகரமும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் நிற்குமாயின், அவை வகர உடன்படுமெய் பெற்றுப் புணரமாட்டா.

அக் குற்றியலுகரம் தான் ஏறியிருந்த மெய்யை விட்டுப் போய்விட, அந்த மெய்யின்மேல் வருமொழி முதலில் இருந்த உயிர் ஏறிக்கொள்ளும்:— [டிது

காடு + இது = காட்உ + இது = காட் + இது = கா

பந்து + ஆட்டம் = பந்த்உ + ஆட்டம் = பந்த் + ஆட்டம் = பந்தாட்டம்.

முரசு + அடி = முரச்உ + அடி = முரச் + அடி = முரசடி.

எமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 9. அயோமுகிப் படலம்.

[820-வது பக்கத் தொடர்ச்சி]

பொருளில தேனின்புவி யுளதென லாமோ.

எனினும், சீதையையும் இலக்குவனையும் இழந்து நின்றஇராமன் பின்னர்த் தான் 'உளனுவது'இயலாதென்ன, மறவாள்கொடு தன் மன்னுயிரைத் துறப்பான் உறுகின்ற தொடர்ச்சியிது அத்தனையும் அவன் மனிதன் என்றே பொய்யும் புகலப்புக்கதேயோ என்னும் ஒரு ஐயமும் உடனுடன் எய்தாதொழிவதற்கு ஆவதில்லை. முன்பு, அன்னைபணி தலைநின்று கானகம் ஏகப் புறப்பட்டநாள் உடன்வருதற் கமைந்த இத்தம்பியை விலக்கி, நகரின்கண் இருக்குமாறு இராமன் வேண்டிக்கொண்டபோது, அதற்காற்றுத இளையோன்,தானும் உடன்செல்வதன் இன்றியமையாமையை வற்புறுத்துவானாகி,

நீருள வெனினுள மீனு நீலமும்
பாருள வெனினுள பாரம் பொற்புற
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
யாருள ரெனினுளெ மருளு வாயென்றான்

[அழகிற்காக நாரையே நாணாகக் கட்டியுள்ள வில்லையுடையவனே, நீர் இருந்தால்தான் மீனும் நீலமலர்களும் உள. பூமி இருந்தால்தான் பொருள்களுக்குப் பாரம் என்பது ஒன்று உண்டு. மற்று, யார் இருந்தால்தான் நானும் சீதையும் உளராவோம், இயம்பியருளுவாய்—என்றான்]

'பாருளவெனினுளபாரம்'என்னுமவ்வெடுத்துக்காட்டுவமையின் பயன் இச்செவ்வியில் சாலப் பெரிது. பூமியின் ஆகர்ஷண சக்தியால்தான் பொருள்களுக்குப் 'பாரம்' என்பதொன்று உண்டாகின்றதென்பதை இக்காலப் பௌதிக சாஸ்திரங்கள் தெரிந்துகொண்டனவாயினும் இவைகளின் உதவியின்றியே கம்பர் அதனை அறிந்திருந்தனர். அகரம் எழுத்துக்களுக்கெல்லாம் முதல்ஆவதுஎத்துணைப்பிரசித்தமாயிருந்ததோ அத்துணைப் பிரசித்தமாகப் பொருள்களின் பாரம் பூமியினால் உண்டாயதென்பது தெரிந்திராவிடின் இவ் வெடுத்துக்காட்டுவமை அமைதற் கியன்றிராது. இராமனைப் பூமியாகவும் தன்னையும் சீதையையும் பொருள்களாகவும்கூறிய இலக்குவன்,தாம் பொருள்களாவது,இராமன் ஆகிய பூமி இருக்கின்ற வரையில்தான்,கூடுமேயன்றி அவன் இல்லையேல் தாமும் அக்கணமே இல்லாதவராகவேண்டிய இன்றியமையாமையைவிளம்பினான்."பாரம் உடையதுபொருள்'என்று பௌதிக சாத்திரிகள் 'பொருள்' என்பதற்குப் பொது இலக்கணம் கூறுவர்; பூமியினாற்றான் பாரம் ஏற்படுகின்றது; பூமி யில்லையாயின் பாரம் இல்லை;பாரம் இல்லையாயின் பொருளுமில்லை. இலக்குவன் தர்க்கம் இது; பௌதிக சாத்திரத்தின் உண்மையும் இதுவே. "நீ இன்றி நாங்கள் ஒரு பொருள் ஆக இயலாதாதலின் நின்னுடன் நாங்கள் வாராமற் றீராது" என்று அன்று, பதின்மூன்று ஆண்டுகளுக்குமுன்னர், எதிரியம்ப இயலாவகை இராமனுக்கு இலக்குவன் எடுத்துக் காட்டினான். அச்சொல் இராமனது நினைவில் இருந்திருத்தல் வேண்டும்; இன்று, அப் பௌதிக உண்மையின் மறுதலை நிலையைக் காட்டப்புகுமளவில் கம்மனோரை மலைக்கச் செய்கின்றனன். எப்படி?

பார் இல்லையேல் பாரம் இல்லை, பாரம் இல்லையேல் பொருளென்பதும் இல்லை. நன்று. பொருள்கள் இல்லாமற் போயினவாயின் பின் இப்பூமி என்னுவது? பூமி இருந்து பொருள்கள் இல்லாமற் போவதென்னும் ஓர் நிலையை எவ்வளவு முயன்றாலும் நம் மனத்தினால் எண்ணிக்கொள்ள இயலாது. பொருளில்லாத பூமி யொன்றைச் சிந்தனை செய்துபார்க்க முயன்று அது உருப்பெறுமல் திகைக்குங்கால் இதனருமை தெரியவரும். பூமி என்று கருதப்படும் அது பொருள்களின் தொகுதியேயன்றி வேறன்று. ஆதலாற்றான், பொருளற்றவோர் பூமியை நாம் சிந்திக்கமாட்டாதவர்களாகின்றோம்.எனின்,பொருளில்லையாயின் பூமியும் இல்லை என்ற முடிவு விளைகின்றது. முன் இலக்குவன் இராமனை நோக்கி, 'ஏ பூமியே, நீ இல்லாமல் பொருள்களாகிய நானும் சீதையும் எங்ஙனம் இருப்போம்" என்று வினவினான். இராமன் இப்பொழுது சீதையையும் இழந்து நிற்கின்றான், இலக்குவனையும் இழந்து நிற்கின்றான். பொருள்கள் இல்லையாயின. எனின் பூமி என்பதொன்றும் இருத்தற் கியலாமை பற்றியோ, அப் பூமியென இலக்குவனால் பாராட்டப் பெற்ற இராமன் தற்கொலையால் தன்னை அழித்துக் கொள்ளப் புக்கனன்! பூமியல்லாது ஒரு பொருள் அதற்குமேல் இல்லையன்றே! அயோமுகி பூசலிடும் ஓசையைத் தொடர்ந்துசென்று இலக்குவன் உயிரோடிருக்கக்கண்டு மனமகிழ்ந்த இராமன்

என்னையங் கெய்திய தியம்பு வாயென
அன்னவ னஃதெலா மறியக் கூறலும்
இன்னலு முவகையு மிரண்டு மெய்தினான்
தன்னலா தொருபொரு டனக்கு மேலிலான்.

[என்ன நிகழ்ந்தது சொல் என்று வினவ, இலக்குவன் நிகழ்ந்தவைகளையெல்லாந் தெரியச் சொல்லுதலும்,தான் அன்றி ஒரு பொருள் தனக்குமேல் இல்லாதவனாகிய இராமன், அதுகேட்டு, துன்பமும் உவகையும் ஆகிய இரண்டையும் அடைந்தவனானன்]

என்று கூறுங்கால், "தன்னலாது ஒரு பொருள் தனக்கு மேல் இலான்" என்ற வாசகத்தில் பூமியும் பொருளும் இயைகின்ற தன்மையையே குறித்துக் கம்பர் பேசுகின்றனரோ என்று அதிசயங் கொள்ளுதலும் அமையும். இன்னணம், இயற்கைச் சக்திகளுக்கும் இயற்கை விதிகளுக்கும் உரியவொரு மறுபெயரேகடவுள்என்னும் ஒரு சமயத்தோர் கொள்கையும்பொய்க்காவண்ணம்,சமயங்கள் தோறும்இருக்கும் அவ்விராமன், இங்ஙனம் இயற்றுகின்றானோவென இச் சில பாசுரங்களால் வினவ இயல்கின்றது. அவன்பாற் கம்பர் கண்ட அலகிலா விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று போலும்.

பௌதிக சாத்திரமும் கடவுள் தத்துவமும் அவ்வாறுக, வருந்திய இலக்குவனை நோக்கி,

ஆய்வுறு பெருங்கட லகத்து ளேயவன்
பாய்திரை வருதொறும் பரிதற் பாலனுந்
தீவினைப் பிறவிவெஞ் சிறையிற் பட்டயாம்
நோயுறு துயரென நடுக்க னுன்மையோ

[ஆழமுள்ளதென்று எல்லோராலும் ஆராய்ந்தறியப்படுகின்ற பெரிய கடலின்நடுவில் அகப்பட்டவன், பாய்கின்ற

அலைகள்வரும்பொழுதெல்லாம் அதுகண்டு இரங்கவேண்டியவனே. அப்படியே, தீவினையால் நேர்கின்ற பிறவியென்னும் கொடிய சிறையில் அகப்பட்ட நாம், துன்பத்தைத் தருகின்ற துயரம் நேர்ந்ததே எனத் தளர்வது திடபமாகுமா]

எனத் தேற்றுங்கால் மானுடவாழ்க்கையின் இரகசியமொன்றை இராமன்வாயிலாகக் கம்பர் கட்டுரைத்துக் காட்டுகின்றார். பிறவி என்பதே துயரப் பெருங்கடல் என்பது எல்லோர்க்கும் தெரிந்ததே யொன்றுபோன்ற மாயையே யுடைத்தாதலின் அதனை என்றுமே இரகசியமென்றே கருதுதல் வேண்டும். அவ்வாறு கருதக்கற்றவர் இவ் வெடுத்துக்காட்டுவமையின் அருமையையும் உணர்வார். ஒன்றொன்று கொண்டு ஒவ்வொருபோது எய்துகின்ற மகிழ்வு கிடக்க,எக்காலத்தும் உள்ளத்தில் உறைந்திருத்தற்குரிய இன்பம் என்பதன் தன்மை யாது என்று வினவுவார்க்கு, இரண்டாயிரத்தைஞ்ஞூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த கிரேக்க தத்துவஞர் ஹிராக்ளிடஸ் முதல், எபிக்டிடஸ், மார்க்கஸ் அரீலியஸ் அனையவர்களும், இன்றைக்குப் பெல்ஜியத்தில் இருக்கின்ற மாரிஸ் மேட்டர்லிங்க் போன்றவர்களும், "இம் மானுடப்பிறவியே ஒரு பெருந் துயரென உணர்தலே இன்பம் ஆம்" எனச் சாற்றுவார். வாழ்க்கையின் தத்துவம் எல்லோர் மனத்திலும் இன்னதேயாய் அமையவேண்டுமென்பது அவர்தம் உறுதி. மனிதன் தானே துன்பமென்னத் தேர்ந்துவிட்டால் பிறகு அவனுக்கோர் துன்பம் வருதற் கியலாதன்றோ! துன்பத்திற்கு எங்ஙனம் துன்பம் வரும்—எனின் எஞ்சுவது இன்பம், என்பது இன்னவர்தம் தர்க்கத் தொடர்ச்சி. கடலில் விழுந்தாகிவிட்டதென்றால் வருகின்ற அலை ஒவ்வொன்றிற்கும் அஞ்சுவது வீண்.கடலினின்று கரையேறும் வகை நாடி முயல்வதாயின் முயலலாம். அதுதான் பிறவியறுக்கும் மருந்தினைத் தேடுவதாம். அதனிடையே அலைபோல் துன்பங்கள் எழுந்து தோன்றுமாயின் என்? அலைகள் அனைத்தும் கரை நோக்கியே பாயுமாதலின் கடலில் விழுந்த ஒருவனை அலைகள் கரைசேர்த்தால் சேர்க்குமே யல்லாமல் புதியதோர் துன்பம் அவனுக்குப் புரியப்போவதில்லை. ஆதலின் மனிதன் பாய்திரை வருந்தொறும் பரிதற்பாலன் அல்லன். அவ்வாறே, ஒன்றையும் நோயுறு துயரென நுடங்கல் நோன்மையன்று. இதனில், ஹிரோக்ளிடஸ் போன்ற சிந்தனையாளர்களும் இராமனும் ஒரு வகைத் தத்துவமே உணரக் கூறுகின்றனர். இந்த ஒற்றுமையில் மிகவும் நுண்ணியதோர் இரகசியம் கரந்திருக்கின்றது.

வாழ்க்கையனைத்தையும் ஒரே துயர்மயமான கடலெனக்கொண்டு விவகரிப்பதேயோகடன்.ஹிரோக்ளிட்டஸ்களும் எபிக்டிடஸ்களும், மார்க்கஸ் அரீலியஸ்களும் அனையவர்,கடவுளை மறக்காவிடத்தும், கடவுளைக் கலக்காமலே தம் வாழ்க்கையைக் கணக்கெடுத்து விவகரிக்கப் புகுகின்றவோர் வகையில் தம் சிந்தனையைச் செலுத்தும் நீர்மையர் ஆவது அவர்தம்மொழிகளினின்று நன்கு விளங்கும். அன்னவரேபோல் கடவுள்பால் சார்வதற்கு இணங்காத நெஞ்சுடைய மாந்தருக்கு, பிறவியில் துன்பம் உண்டு என்பதற்குப் பதிலாகப் பிறவியே துன்பம் என்னும் மனநிலை வாய்க்கப் பெறுவது, துயரத்தினின்றல்லாவிடினும் துயரத்தின் சிற்சில கோலங்களிலிருந்து ஒருவாறு தப்புதற்குரிய உபாயம் ஆகலாம். எனினும் அது உடன்பாட்டுநிலையாகிய இன்பத்தை எய்தியதாகாது. வருகின்ற துன்பத்தை 'அநுபவிக்கமாட்டேன்' என்றவோர் உறுதிகொண்ட மனத்திட்பத்தால் புறக்கணிக்கப் புகுவது (அதுதான் எத்தனை தூரம் கைகூடும் என்பது கேள்வி) இன்பமெனலாவது எங்ஙனம்? ஏனெனில், கடவுளுக்குத் தம்மை ஆளாக்கிக்கொண்ட அடியார்கள், துன்பமல்லாமை மாத்திரமன்றித் தம்முடைய இன்பநிலையை ஐயமற விளம்பியுளர். இச்செய்திக்கு ஆதாரமாக மேற்கோள்கள் கூறல் மிகை. இதனாலன்றோ மனிதப்பிறவியும் வேண்டுவதே என்றனர் அத்தகைய மேலோர்.

மற்று, கம்பர் ஏன் இங்ஙனம் கூறினர் என்ன வியக்கவேண்டா! ஏனெனில், கம்பர் அதனைக் கூறவில்லை. இராமனே கூறினன். 'தன்னலா தொரு பொருள் தனக்குமேல் இலான்' என்று இதற்கு முன் பாசுரத்தில் இராமன் பரம்பொருளாவதை நமக்கு நினைவுசெய்தளித்தநு வீணிற்கன்று. இவனே கடவுளாதலின் இவனுக்கு ஓர் கடவுள் இல்லை. தன் திருநாமத்தைத் தானே சாற்றித் திரியவேண்டிய ஏழை இவன். மனிதப்பிறவி எடுத்துவிட்டனன்; மற்று மனிதர்க்கு வாய்த்ததொரு கடவுளோ பாவம் இராமன் பெற்றிலன். ஆதலால், கடவுட்பேற்றினால் விளைகின்ற இன்பத்தை உணரவல்ல நன்மையை எய்தாதவனாகி,ஹிரோக்ளிட்டஸ் அனையவர் வரிசையில் நின்று, பிறவியைத் துயரக்கட லாக்கி அவர் கூறுகின்ற எதிர்மறை நோன்மையை உபாயமாகக் கூறலாயினன். கடவுளில்லாமை என்றுமே இராமனுக்கோர் கடக்கரிய குறை. எல்லாம் வல்லவன் கடவுள் என்பது என்! தனக்கொரு கடவுள் ஆக்கிக்கொள்ள வல்லதோ அப்பரம்பொருள்?

இன்னவாறு தன் தம்பியைத் துன்பமே புகன்று தேற்றியபின் இராமன் அவனருமையைப் பாராட்டுவானாகி," மூன்று தேவர்களும் மூன்று உலகங்களும் என்மேல் பகைகொண்டெழுந்தாலும், நீ என் அருகிருக்க என்னைக் கடக்கவல்லார் யார்" என்றும்,"என்னைவிட்டுப் பிரிபவர் எல்லாம் பிரிக, எனக்கு வருவனவெல்லாம் வருக, எனக்கு நேர்வனவெல்லாம் உன்னால் தீருமல்லது துன்பந் தங்குமோ" என்றும் நயந்துரைத்துப் பின் அவ்வரக்கியைக் 'கொன்றிலைபோலு மெனப் பரிந்து வினவியவளவில் இலக்குவன், அவள் மூக்கையும் செவியையும் முலையுமே கொய்தவாறு கூறி இருகை கூப்பி நிற்றலும், இராமன்,

தொல்லிரு டனைக்கொலத் தொடர்கின் றாளையும்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினாய்
வல்லைநீ மனுமுதல் மரபி னோயெனப்
புல்லின னுவகையன் பொருமி விம்முவான்

[மகிழ்ச்சியால் உடல் பூரித்தவனாகி, "மிக்க இருட்டில் தன்னைக் கொல்லவந்த அரக்கியையும் கொல்லாமல் மூக்கை அறுத்துப் போகவிட்டாய். மனுவைமுதலாக உடைய நம் மரபினைக் காத்தவனே, நீயல்லனோ வல்லன்," என்று அவனைத் தழுவிக்கொண்டான்]

இராமன் இங்குப் பொருமி விம்மி இளையோனை 'மனுமுதல் மரபினோய்' என அழைத்துத் தழுவியதற்கு முன்னைய சரித்திரம் பெரிதுளது. பண்டைநாள் தாடகைக் கொடியாள் தன்முன் எதிர்ந்தபோது, பெண்ணென இப்பெருந்தகை தன் மனத்திடை நினைத்து அவளைக் கொல்லக் கூசினனாயினும் கோசிகன் ஏவலால் அவன் அக்கன்னிப் போர் புரியாமல் தீர்ந்ததில்லை. இச்சம்பவத்தின் விளைவை அவ்வயின் ஆய்ந்து, இக்காரியம் தான் செய்யும்படி வற்புறுத்தப்பெற்றதன் பரிபவத்தை நினைந்து நினைந்து இரங்கிய மனத்தினன் இராமன் ஆகிய பரிசை வரைந்துளோமாதலின், இவ்விடத்து மீண்டு மவைகளை இயம்ப வேண்டா. அன்னவன், இன்று தன் தம்பி பெண்கொலை புரிதலின்றியே காத்தனன் என்பது காணத் தம் மனுமுதல் மரபிற்கிணங்கி ஒழுகினோன் தன் குலத்தில் ஒருவனேனும் நேர்ந்தனனே என்னும் இம்மகிழ்வே, இராமன்தான் தாடகையைக் கொன்றது அடாதென நினைந்து எத்துணை மனம் புழுங்கி நெடிது வருந்தியிருத்தல் வேண்டுமென்பதைக் காட்டுகின்றது. இருமுறை அரக்கியர் மூக்கினை அறுத்தனன் இத்தம்பி. சூர்ப்பணகையின் அறுந்த மூக்குச் சீதையையிழப்பித்ததென்னின், ஆசையின் வந்த இவ் வயோமுகியின் மூக்கோ இலக்குவனுக்கு இணையிலாப் பெரும்புகழ் இராமன்பால் வாங்கித்தந்தது.

இலக்குவன் நீர்கொணரச் சென்றதெல்லாம் அவனுக்கு இவ்வகைப் புகழும் நமக்கு அவ்வகைத் தத்துவமும் கொணர்ந்ததேயன்றி இராமனது தாகத்திற்கோ யாதும் வாய்க்கவில்லை. இறுதியில் வருணமந்திரத்தினாற்றான் அவன் வானநீர் வரப்பெற்றுத் தணியலாயினன். இதன்பின் இளையவன் மெல்லடி வருடப் பள்ளிகொண்ட இராமன் அக்கங்குலின்வாய்த் துயில் பெறுமல் சீதையை நினைந்து நெடிது இரங்குவானாயினன். அப்பொழுது,

மானவண் மெய்யிறை மறக்க லாமையின்
ஆனதோ வன்றெனி னரக்கர் மாயமோ
கானக முழுவதுங் கண்ணி னோக்குங்காற்
சானகி யுருவெனத் தோன்றுந் தன்மையே

[கண்திறந்து பார்க்குந் தோறும் கானகம் முழுவதும் சீதையின் உருவமேயாக இராமனுக்குத் தோன்றுவது, பெருமை வாய்ந்த அச்சீதையின் மேனியைச் சிறிதேனும் மறக்கமுடியாமையால் உண்டானதோ, அல்லது அரக்கர் செய்த மாயமோ]

என இராமன் இரங்குமளவில்,

கருங்குழற் சேயரிக் கண்ணிற் கற்பினோர்க்
கருங்கல மருங்குவந் திருப்ப வாசையால்
ஒருங்குறத் தழுவுவா னென்றுங் காண்கிலேன்
மருங்குல்போ லானதோ வடிவு மெல்லவே

[கரிய கூந்தலையும் சிவந்த இரேகைபடர்ந்த கண்களையும் உடைய கற்புடைய மாதர்களுக்கு அருமையான ஆபரணம் போன்ற சீதையின் உருவெளித்தோற்றம் இராமனுக்குப் பக்கத்தில் வந்திருக்க, ஆசையால் வாரியணைத்துத் தழுவப்புக்கவன் ஒன்றுங் காணமல் அவள் இடைபோலவே வடிவம் முழுவதும் மெல்ல மெல்ல ஒன்றுமில்லாததாகிவிட்டதோ' என்று ஏங்கினன்]

இரவோ இறுதிகாணமல் இராமனுக்கு வளர்கின்றது. புன்கண்கூர்ந்து பொறுமை இழக்கின்றான்-

மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
எண்ணினும் பெரியதோ ரிடர்வந் தெய்தினால்
தண்ணறுங் கருங்குழற் சனகன் மாமகள்
கண்ணினு நெடியதோ கொடிய கங்குலே

[மண்ணினும் ஆகாயத்திலும் மற்றைய நீர் நெருப்பு காற்று என்னும் மூன்று பூதங்களிலும் எண்ணத்தைக் காட்டிலும் பெரியதோர் இடுக்கண் வந்தெய்தினால் அதனால், குளிர்ச்சியும் வாசனையும் பொருந்திய கரிய கூந்தலையுடைய சனகன் புத்திரியாகிய சீதையின் கண்ணை விட நீண்டதாக வேண்டுமோ இக்கொடிய இருள்]

என இருளினைப் பழிக்குமளவில்உடுக்களுந் திங்களும் உதித்திட அவைகளை நோக்கி

அப்புடை யலங்குமீ னமரு மார்கலி
உப்புடை யிந்துவென் றுதித்த வூழித்தீ
வெப்புடை விரிகதிர் விரிப்ப மெய்யெலாங்
கொப்புளம் பொடித்ததோ கொதிக்கும் வானமே

[நீரையுடையதும் அசைகின்ற மீன்களை யுடையதும் ஆகிய கடலின் உப்பினின்று சந்திரன் என்ற பேரோடு உதித்த இந்த ஊழித்தீயானது வெப்பமுடைய விரிந்த கிரணங்களை வீசுவதனால் தாபம் மிகுந்த ஆகாசம் தனது உடம்பு முழுவதும் கொப்புளம் கொண்டதோ]

எனத் தன்னிலைகொண்டு ஆகாயத்தின்நிலையை மதித்து மறுகுவானாயினன்.இதற்கிடையில் செங்கதிர்ச்செல்வனுங் குடபால் தோன்றினன்.

அயோமுகிப்படலம் முற்றிற்று.

யாப்பிலக்கணம்

[817-வது பக்கத் தொடர்ச்சி]

வண்ணம்

தொல்காப்பியர் வண்ணத்தை இருபதாக வகுத்தனர். அவை:—

பாஅ வண்ணம், தாஅ வண்ணம்,
வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம்,
இயைபு வண்ணம், அளபெடை வண்ணம்,
நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம்,
சித்திர வண்ணம், நலிபு வண்ணம்,
அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம்,
ஒழுகு வண்ணம், ஒரூஉ வண்ணம்,
எண்ணு வண்ணம், அகைப்பு வண்ணம்,
தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம்,
உருட்டு வண்ணம், முடுகு வண்ணம்என்
றாங்கன மறிப அறிந்திசி னோரே

என்னுந் தொல்காப்பியம் செய்யுளியல் சூத்திரம் 214-ல் அமைந்துள்ளபடி குறியீடிட்டு வழங்கப்படும்.

1. பாஅ வண்ணம்:—அவற்றுள் பாஅ வண்ணம் என்பது சொற்சீரடியால் இலக்கண நூலிற் பயின்று வருவதாம்.

உ-ம்:—1. 'கு ஐ ஆனென வரூஉ மிறுதி
ஆவொடுஞ் சிவணுஞ் செய்யு ளுள்ளே.'
2. 'அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு.'
3. 'புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.'

இம் மூன்றும் தொல்காப்பியத்திலுள்ள சூத்திரங்களாம்.

2. தாஅ வண்ணம்:—தாஅ வண்ணம் என்பது, ஒவ்வோரடி இடையிட்டு வந்த எதுகைச் செய்யுளாம்.

உ-ம்:—தோடார் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உண்கண் பைதல் உழவா
வாடா வவ்வரி தகைஇப் பசலையும்
வைகல் தோறும் பைப்பயப் பெருக

நீடா ரிவரென நீண்மனங் கொண்டோர்
கேளார் கொல்லோ காதலர் தோழிஇ!
வாடாப் பௌவம் அறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே.'

இச் செய்யுளில் ஒவ்வோரடியிடையிட்டு எதுகை யமைந்துள்ளமை காண்க.

3. வல்லிசை வண்ணம்:—வல்லிசை வண்ணம் என்பது, வல்லெழுத்து மிகுந்து வருமாறு பாடப் படுவதாம்.

உ-ம்:-'இடர்த்திறத் தைத்தற பொற்றொடி
நீயிடித் துத்தடித்துச்
சுடர்க்கொடி திக்கணைத் துந்தடு
மாறத் துடிக்குமைக்கார்
மடற்குயிற் கொத்தொளிக் கக்களிக்
கப்புக்க தோகைவெற்றிக்
கடற்படைக் கொற்றவன் பொற்கொடித்
தேரினிக் கண்ணுற்றதே.'

இக் கட்டளைக்கலித்துறையில் வல்லின எழுத்து மிகுந்து வந்துள்ளமை காண்க.

4. மெல்லிசை வண்ணம்: —மெல்லிசை வண்ணமாவது, மெல்லெழுத்து மிகுந்து வருமாறு பாடப் படுவதாம்.

உ-ம்:-'பொன்னி னன்ன புன்னை நுண் டாது
மணியி னன்ன நெய்தலங் கழனி
மனவென உதிரு மாநீர்ச் சேர்ப்ப!
மாண்வினை நெடுந்தேர் பூண்மணி ஒழிய
மம்மர் மாலை வாநீ
நன்மா மேனி நயந்தனை எனினே.'

இந்நேரிசையாசிரியப்பாவில் மெல்லின எழுத்து மிகுந்து வந்துள்ளமை காண்க.

5. இயைபு வண்ணம்:—இயைபு வண்ணம் என்பது, இடையின எழுத்து மிகுந்து வரப் பாடப்படு வதாம்.

உ-ம்:—'வால்வெள் ளருவி வரைமிசை யிழியவும்
கோள்வல் லுழுவை விடரிடை யியம்பவும்
வாருகி ருளியம் வரையக மிசைப்பவும்
வேலொளி விளக்கிநீ வரினே
யாரோ தோழி வாழ்கிற் போரே.'

இந்நேரிசையாசிரியப்பாவில் இடையின எழுத்து மிகுந்து வந்துள்ளமை காண்க.

6. அளபெடை வண்ணம்:—அளபெடை வண்ணமாவது, அளபெடை பயின்றுவரப்பாடப்படுவதாம்

உ-ம்:—தாஅம் படுநகர்க்குத் தண்ணீ ருளகொலோ
ஆஅம் பலவழி யன்னை யறிவுறில்
வாஅம் புரவி வழுதியோ டெம்மிடைத்
தோஒ றுவலுமிவ் வூர்.'

இவ் வின்னிசை வெண்பாவில் அடிதோறும் முதற்கண் அமைந்துள்ள சீர் அளபெடையாத லறிக.

7. நெடுஞ்சீர் வண்ணம்:—நெடுஞ்சீர் வண்ணமாவது, நெட்டெழுத்து மிகுந்து வரப் பாடப்படுவதாம்.

உ-ம்:— நீரூர் பாணு யாறே காடே
நீலூர் காயாம் பூவீ யாவே
காரூர் பாணு மாலே யானே
யாரோ தாமே வாழா மோரே
ஊவீர் பாகா தேரே
பீரூர் தோளாள் பேரூ ராளே.

இந்நேரிசை யாசிரியப்பாவில் நெட்டெழுத்து மிகுந்து வந்துள்ளமை காண்க.

8. குறுஞ்சீர் வண்ணம்:-குறுஞ்சீர் வண்ணம் என்பது, குற்றெழுத்து மிக்கு வரப்பாடப்படுவதாம்.

உ-ம்:—
உறுபெய லெழிலி தொகுபெயல் பொழியச்
சிறுகொடி யவரை பொரிதளை யவிழக்
குறிவரு பருவ மிதுவென மறுகு
செறிதொடி நலமிலை யழியல்
அறியலை யரிவை கருதிய பொருளே.'

இந்நேரிசை யாசிரியப்பாவில் குற்றெழுத்து மிகுந்து வந்துள்ளமை காண்க.

9. சித்திர வண்ணம்:—சித்திர வண்ணமென்பது, குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் விரவிவரப் பாடப் படுவதாம்.

உ-ம்:— 'ஊர்வாழி யூரர் தேர்தார் வாசி
பேர்சேரி கார்பே ரிரைய
வாரி பீர்நீர தோழி தோளே.'

இந்நேரிசை யாசிரியப்பாவில் குறில் நெடில் விரவி வந்துள்ளமை காண்க.

10. நலிபு வண்ணம்:—நலிபு வண்ணம் என்பது, ஆய்த எழுத்துப் பயிலப் பாடப்படுவதாம்.

உ-ம்:—
எஃகொ டவன்காப்ப ஏமாந்தாள் போதந்தான்
அஃகுநீர்க் கான்யாற் றயன்மண லெக்கர்மேல்
இஃதோநின் பாவை திருந்தடி பின்றை
அஃதோ விடலை யடி.

இவ் வின்னிசை வெண்பாவில் அடிதோறு முதற் சீர்க்கண் ஆய்தம் பயின்று வந்துள்ளமை காண்க.

கலித்தொகை

[816-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 35

இளவேனிற்கால வரவினைக் கண்டு தலைவி ஆற்றாளாய் வருந்தினாள். அதனைக் கண்ட தோழி பெரிதும் வருந்தித் தன் ஆற்றாமையைத் தலைவிக்குக் கூறி அவளைக் குறிப்பால் ஆற்றுவித்ததைக் கூறுவது இச் செய்யுள்:—

கொடுமிட னாஞ்சிலான் றார்போன் மராத்து
நெடுமிசைச் சூழு மயிலாலுஞ் சீர
வடிநரம்பிசைப்பபோல்வண்டொடுசுரும்பார்ப்பத்
தொடிமகண் முரற்சிபோற் றும்பிவந் திமிர்தர
வியனெழீஇ யவைபோல வெவ்வாயு மிம்மெனக்
கயனணி பொதும்பருட் கடிமலர்த் தேனூத
மலராய்ந்து வயின்வயின் விளிப்பபோன் மரனூழ்
இருங்குயி லாலப் பெருந்துறை கவின்பெறக் [ப்ப
குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்
சீரார் செவ்வியும் வந்தன்று
வாரார் தோழிநங் காத லோரே
பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்

நனியறல் வாரும் பொழுதென வெய்ய
பனியறல் வாருமென் கண்
மலையிடைப் போயினர் வரனசைஇ நோயொடு
முலையிடைக் கனலுமென் னெஞ்சு
காதலிற் பிரிந்தார் கொல்லோ வறிதோர்
தூதொடு மறந்தார் கொல்லோ நோதகக்
காதலர் காதலுங் காண்பாங் கொல்லோ
துறந்தவ ராண்டாண் டுறைகுவர் கொல்லோ
நீளிடைப் படுதலு மொல்லும் யாழநின் [யாவது
வாளிடைப் படுத்த வயங்கீ ரோதி
நாளணி சிதைத்தலு முண்டென நயவந்து
கேள்வி யந்தணர் கடவும்
வேள்வி யாவியி னுயிர்க்குமென் னெஞ்சே.

(தரவு)

(வரி 1-11) கொடுமிடல் - கொடிய வலியினையுடைய, நாஞ்சிலான் -கலப்பைப் படையினையுடைய பலராமனது, தார்போல் - துளசி மாலையைப் போல, மராத்து நெடு மிசை - வெண்கடம்ப மரத்தின் உச்சியில், சூழும் மயில் ஆலும் - சுற்றியிருக்கின்ற மயில்கள் ஆரவாரிக்கும், சீர - சிறப்பினையுடையவாய், வண்டொடு சுரும்பு - (அம்மரத்திலே) பெண்வண்டுகளோடு ஆண்வண்டுகள், வடி நரம்பு இசைப்ப போல் - (விரலால்) எறிந்த யாழ் நரம்புகள் இசைப்பன போல, ஆர்ப்ப - ஒலி செய்யவும், தொடிமகள்- தொடி என்னும் அணியையுடைய விறலி, முரற்சிபோல்- ஆலாபம் செய்வதுபோல, தும்பிவந்து இமிர்தர-தும்பிகள் வந்து ஒலி செய்யவும், கயன் அணி பொதும்பரில் - குளங்கள் அழகு செய்கின்ற இளமரச் சோலையில், கடிமலர் - மணமுள்ள மலர்களில், இயன் எழீஇயவை போல - வாச்சியங்கள் எழுப்பின ஓசைபோல, எவ்வாயும் - எவ்விடத்திலும், இம்மென - இம்மென்னும் ஓசை உண்டாகும்படி, தேன் - வண்டுகள், ஊத-ஒலி செய்யவும், மரன் ஆய்ந்து- மரங்கள் (அணிய உரியவரை) ஆராய்ந்து, வயின் வயின் விளிப்ப போல் - தத்தம் இடங்களிலே அழைப்பனபோல, மலர் ஊழ்ப்ப-மலர்களை மலரவும், இருங்குயில் ஆல - கரிய குயில்கள் ஆரவாரிக்கவும், பெருந்துறை கவின் பெற - பெரிய நீர்த்துறைகள் (பூவால்) அழகு பெறவும், விழவு எதிர்கொள்ளும் - காமனுக்கு நிகழ்த்தும் திருவிழாவை எதிர்கொள்ளும், குழவி வேனில் - இளவேனிலாகிய,சீர் ஆர் செவ்வியும் - சிறப்புப் பொருந்திய காலமும், வந்தன்று - வந்துவிட்டது, தோழி - தோழியே, நம் காதலர் வந்திலர்-நமது அன்பரோ (இன்னம்) வாராராயினர்! குழவு - இளமை; அதனையுடையது குழவி.

(வரி 12-13) நுதல் - எனது நெற்றி, பாஅய் பாஅய் - (பசலை நிறம்) பரவிப் பரவி, பசந்தன்று-முற்றும் பசந்து விட்டது; தோள் (என்) தோள்கள், சாஅய் சாஅய் - மெலிந்து மெலிந்து, நெகிழ்ந்தன - முற்றும் மெலிந்து விட்டன.

(வரி 14-15) என் கண் - என் கண்கள், நனி அறல் வாரும்பொழுது என-(இக்காலம்) பெரிதும் நீர் ஒழுகும் இளவேனிற்காலமென்று (கண்டு), வெய்ய - வெம்மையையுடைய, பனி அறல் வாரும் - துன்பக் கண்ணீர் ஒழுகும்.

(வரி16-17) என் நெஞ்சு-எனது மனம், மலையிடைபோயினர் - மலையிடத்தே போனவருடைய, வரன் நசைஇ - வருகையை விரும்பி, நோயொடு-காமத்தீயாலே, முலையிடை கனலும் - என்னுடைய முலையெல்லாம் காந்தும்.

(வரி18-26)காதலின்-(காதலர் நம்மிடத்துக் கொண்ட) காதலிலிருந்து, பிரிந்தார் கொல்லோ - நீங்கினரோ! நோதக-(நாம்) துன்பம் மிக, வறிது-(அவர்) அன்பின்றி, ஓர் தூது - ஒரு தூது (நம்மிடை விடுதலையும்), மறந்தார் கொல்லோ -மறந்தாரோ! காதலர் காதலும் - அவர் (நம்மிடத்தில் நிகழ்த்தும்) காதலையும், காண்பாம் கொல்லோ - (நாம் இறந்துபடாமல் இருந்து) காண்போமோ! துறந்தவர் ஆண்டு ஆண்டு - நம்மை இங்ஙனம் விட்டு நீங்கியவர் அந்தந்த இடங்களிலே, உறைகுவர் கொல்லோ - இருந்தே விடுவாரோ!, யாவது - (இவற்றுள் நிகழ்வது) யாதோ (என்று தலைவி கூறக்கேட்ட தோழி), நீள் இடை படுதலும் ஒல்லும் - (கூடியிருந்த) தலைவர் தூர தேசத்தில் பிரிந்திருத்தலும் இவ்வுலக இயற்கைக்குப் பொருந்தும், வாள் இடை படுத்த-(ஆயினும் அப்பிரிவு) வாளாலே வகுப்புச் செய்த, வயங்கு ஈர் ஓதி - விளங்குகின்ற நெய்ப்புடைய நின் கூந்தலிடத்தே, நாள் அணி சிதைத்தலும் - நாள்தோறும் செய்யப்படும் அழகைச் செய்யாவாறு கெடுத்தலும், உண்டு என - உண்டெனக் கருதி, நயவந்து- விரும்பி, கேள்வி அந்தணர் கடவும்-வேதங்களில் வல்ல அந்தணர் நடத்தும், வேள்வி ஆவியின் - யாகத்தினின்றும் தோன்றும் புகைபோல, என் நெஞ்சு உயிர்க்கும் - என் மனம் நெட்டுயிர்ப்புக் கொள்ளுகின்றது! (எனத் தன் ஆற்றாமை கூறித் தலைவியைக் குறிப்பால் ஆற்றுவித்தாள்)

ஒடு - அசை. 'இன்றொடு நாளைக் குறுக வருமரோ கூற்று' (வெண்பாமாலை - பொதுவியல்; பெருங்காஞ்சி)

பாலைக்கலி முற்றிற்று.

வர்த்தமானம்

தமிழறிஞர் ஸ்ரீமான் ரா. ராகவையங்கார் சென்னைச் சர்வகலாசாலையின் ஆதரவில் நிகழ்த்திய அரிய சொற்பொழிவின் முக்கிய பகுதிகளை அடியில் வெளியிடுகிறோம்:—

'காஞ்சி' என்ற சொல்லுக்கு நிலையாமை என்று பொருள். இத்தகைய ஓசையுடைய சொல் நிலையாமையை உணர்த்துகின்றது என்று எந்தமொழியிலும் கேட்டதில்லை. 'காஞ்சி' என்ற சொல் ஒன்றுமே தமிழர் பெருமையை உணர்த்துவதாகும். ஒரு புலவர் பாண்டியனிடம் சென்று 'நினது பொருள்கள் யாக்கை இன்பம், புகழ், முதலியன யாவும் நிலையற்றன' என்பதாகக் கூறும் பாடலுக்கு 'மதுரைக் காஞ்சி' என்று பெயர் கொடுத்திருக்கிறார். இப்பாடலின் நிலையாமையின் நுட்பமனைத்தும், தன்மையும், விளைவுகளும் மிக அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன. நிலையற்றவைகளில் துக்கமென்பதும் ஒன்று எனத் தெரிந்து கூறிய புலவர்கள் ஒரு சிலரே.

நிலையாமையின் தன்மையைச் செந்நாப் புலவர் ஒருவர் மிக அழகாகக் கூறியிருக்கிறார்.

"யாதும் ஊரே, யாவருங் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்தலு மில்லே, முனிவில்
இன்னா வென்பது மில்லே"

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலே" மருந்துகள்
"ஜூல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடபிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகல்
ஜ்வரோக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

என்பது மேற்கூறிய புலவர் வாக்கு. இதன் பொருள் வருமாறு:—

உலகின்கண் உள்ள எல்லா ஊர்களும் எமது ஊரே. உலக மாந்தர்கள் யாவரும் எமது சுற்றத்தார்களே. தீமையும் நன்மையும் பிறரால் நமக்கு அளிக்கப்படுவனவல்ல. நோய் வருதலும், நோய் தீர்தலும் எம்மையே பொறுத்ததாகும். இறப்பு என்பதில் புதுமை என்ன இருக்கின்றது. வாழ்வது மிக இனிமையானது என்று ஒருநாளும் மகிழ்ந்ததில்லை. இறுதிக் காலத்தில் துன்பம் வருமென்பதையும் யாம் நம்பமாட்டோம்.

இப் புலவர்பெருந்தகையின் உள்ளக் கருத்தைச் சிறிது ஓர்மின். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று கூறுவதின் மூலம் இப்புலவரின் விசால நோக்கமும் இப்புலவர் கூற வந்த நிலையாமையின் தன்மையும் எவ்வளவு அழகாக விளங்குகின்றன. தனக்கு வரும் பெருமை இன்பம் துன்பம் யாவும் தன்னாலே ஏற்படுகின்றன என்பதைப் புலவர் எத்துணை அழகுற இயம்புகிறார்.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினு
மேன்மே லுயர்த்து நிற்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்.

என்ற வெண்பாவின் கருத்து ஈண்டு ஒப்பிடத் தகுந்தது.

பண்டை நாளில், தமிழர் நிலத்தை ஐந்து பகுதிகளாக வகுத்து ஒவ்வொரு கடவுளை அதிபதியாக அமைத்த திறல் போற்றத் தகுந்தது. இவ்வமைப்பிற்கு ஐந்திணை என்று பெயர். இத்தகைய நிலவகுப்பு இருக்கு ஆரணத்தில் ஒரு இடத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழரும், வடமொழியாளரும் தவிர வேறு எந்த நாட்டினரும் இத்தகைய சீரிய பாகுபாட்டை அமைத்திருப்பதாக யான் அறிந்ததுமில்லை, கேட்டதுமில்லை. முல்லைக்கு (காடும் காடு சார்ந்த இடமும்) அதிபதி மாயோன், குறிஞ்சிக்கு (மலையும் மலை சார்ந்த இடமும்) அதிபதி முருகன், மருதத்திற்கு இந்திரன் அதிபதி, நெய்தலுக்கு(கடல் சார்ந்த இடம்) அதிபதி வருணன், பாலைக்குத் துர்க்கை அதிபதி. இவ்வாறு நிலத்தினை வகுத்து ஒவ்வொரு பகுதிக்குரிய கடவுளை வணங்குதலும், அக்காலத்துத் தமிழர் வழக்கம்.

மீவார் பரம்பரையைச்சேர்ந்த ஒரு மன்னன் காட்டில் வசித்துவந்தான். அவன் குடும்பத்தினர் அனைவரும் ஒரு காளிகோயிலில் உறங்கிக்கொண்டிருந்தனர். அப்பொழுது கோயிலின் மேற்கூரை நெறிந்து விழ ஆரம்பித்தது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்த தன் மனைவி மக்களை எழுப்பாமல் வேறு மரத்தூண் வரும்வரையில் மன்னன் கூரையைத் தாங்கி நின்றான் என்று டாட் எழுதிய ராஜஸ்தான் என்னும் நூலில் கூறப்பட்டிருக்கின்றது. இதுவே சமர்ப்பண புத்தி. இதுவே தியாகம். இதுவே குடும்ப வாழ்க்கையினது பெருமைக்குத் திறவு கோல். இத்தகைய உயரிய இலக்ஷியங்களைக் கொண்டு நம்மவர் நடக்க முயல்வதே சிறப்புடைத்து.

கோப்பெருஞ் சோழன் பெரியதோர் அரசன். அவனுக்கு இரு மக்கள். அவர்கள் தந்தைமீது படையெடுத்து வந்தனர். பெரும் புலவர்கள் தந்தையிடம் சென்று அவரை விட்டுக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டனர். கோப்பெருஞ் சோழன் அவ்வாறே நாடு துறந்து வடக்கிருந்தார். அப்பொழுது அவருக்கு ஒரு புலவனைப் பற்றிய நினைவு வந்தது. அவ்வாறே அச்சமயம் புலவரும் வந்தார். பிசிராந்தையார் அவரைப் பார்த்து எத்தனையோ வயதாயினும் ஏன் நரையில்லையெனப் பலர் அவரைக் கேட்டனர். அவர் கற்பிற் சிறந்த என் மனைவியும் மக்களும் அறிவிற் சிறந்தனர். என் ஏவலாளரும் குறிப்புணர்ந்து பணி செய்வர். என் வேந்தனும் அல்லல் செய்யாது காப்பான். மேலும் என் ஊரில் சான்றோர் பல்லாயிரவர் உளர். ஆதலால் என் தலை நரைக்கவில்லையென்று பதிலளித்தார். இது குடும்ப வாழ்க்கை எவ்வாறிருக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டுக் காட்டும். மனைவி பிறழ்ந்தாலும், மக்கள் பிசகினாலும், ஏவலாளர் மாறுபடினும், வேந்தன் நெறி நீங்கினும், சான்றோர் இலராயினும் மக்களின் உற்சாகம் குன்றுமென்பது குறிப்பு.

* * *

ஜெர்மன் கோபுரம்:--ஜெர்மனியின் தலைநகரிலுள்ள ஒரு மாதாகோயிலின் கோபுரத்தின் உயரம் 628 அடியாம். இதுவே ஐரோப்பாவிலுள்ள கோயில் கோபுரங்களில் மிகப் பெரியதாம்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000
The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

கோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா ?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின்
எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு
வளரும்படி செய்யும். உடனே வாங்கி
உபயோகியுங்கள்.
5 தொலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும் ! கேட்லாக். இனும் !!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)